விலை ரூபா 1-00 ★

# ஈழநாடு

THE EELANADU

மலர் 24 ஆனி 26 றம்ழான் 18 இதழ் 147

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 10—7—82

## பல்கலைக்கழகமாணவருக்கு புலமைப் பரிசில்!

### மன்னார் மா. அ. சபை முன்மாதிரி

(மன்னார்)

பல்கலைக்கழகத்துக்கு தெரிவு செய்யப்படும் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த வசதி குறைந்த மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்கும் திட்டம் ஒன்றை மன்னார் மாவட்ட அபிவிருத்தி சபை ஆகஸ்ட் முதல் செயல்படுத்தவுள்ளது.

முதல் வருடம் வசதி குறைந்த மாணவர்களில் 5 பேருக்கு மாதமொன்றுக்கு தலா 300 ரூபா வீதம் இந்த நிதி வழங்கப்படும். தொடர்ந்து ஒவ்வொருவருடமும் 5 மாணவர்கள் இத்திட்டத்தில் அதிகமாகச் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

இந்தப் புலமைப்பரிசில் திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்த பெரும் நிதியை மன்னார் மாவட்ட அபிவிருத்தி சபை வங்கியில் முதலீடுசெய்து அதிலிருந்து வரும் வட்டிப்பணத்தைப் பயன்படுத்தவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் பொறியியல், விஞ்ஞானம், கலை, மருத்துவம் ஆகிய நான்கு பாடங்களில் திறமைச்சித்தி பெறும் மாணவர்களில் ஒருவருக்கு புத்தகங்கள் வாங்குவதற்கு புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் ஆயிரம் ரூபா அன்பளிப்பாக வழங்

[8-ம் பக்கம் பார்க்க]

# சேபால மனைவியும் மகனும் இத்தாலி திரும்பினர்!

### ஹேவாஹெட்ட புதிய எம். பி.

[கொழும்பு]

ஹேவாஹெட்ட தொகுதி எம். பி. யாக செல்வி ரூபா ஷிரியானி டானியல் நியமிக்

(8-ம் பக்கம் பார்க்க)

## சேபால பிணை மனுமீது திங்கட்கிழமை தீர்ப்பு

(கொழும்பு)

**இத்தாலிய விமானத்தைக்கடத்திய இலங்கையரான சேபால எக்கநாயக்காவின் இத்தாலிய மனைவியும் மகனும் நேற்று இத்தாலிபயணமானார்கள்!**

சேபால எக்கநாயக்கா தொடர்பான விசாரணை முடியும் வரை அவரது மனைவியை இலங்கையில் தடுத்து வைப்பதற்காக பொலிசார் நேற்று கொழும்பு மஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யவிருந்த அதே நேரத்தில் எக்கநாயக்காவின் மனைவி இத்தாலி சென்று விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

261 பிரயாணிகளுடன் இத்தாலிய விமானத்தைக் கடத்திய சேபால எக்கநாயக்கா, 36மணிநேர 'கடத்தல்நாடகத்தின்' பின்னர் தனது இத்தாலிய மனைவி அன்னுவுடனும், நான்கு வயது மகனுடனும் பணயப் பணமான மூன்றுலட்சம் டாலருடனும் 'ஏர்லங்கா' விமானமார்க்கமாகத் இம்மாதம் முதலாம் திகதி கொழும்பு திரும்பியது வாசகர்கள் தெரிந்ததே.

கொழும்பிலுள்ள பெரும் நட்சத்திர ஹோட்டலில் தனது மனைவி, மகனுடன் உல்லாசமாக இரண்டு நாட்களைக் கழித்த சேபால, கடந்த சனிக்கிழமை காலியில் வைத்துக் கைது செய்யப்பட்டார். மனைவியும், மகனும் திஸமாரகமவில் தடுத்துவைக்கப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து சேபாலா இம்மாதம் 16-ம் திகதி வரை றிமாண்டில் வைக்கப்பட்டு, அவர், வங்கியில் வைப்பிலிட்ட 2 லட்சத்து 80,000 டாலர்களையும் தடுத்து வைக்கும்படி கொழும்பு நீதவான் உத்தரவிட்டிருந்தார்.

[8ம்பக்கம் பார்க்க]

### யாழ். நகரில்

## மக்கள் நடமாட்டம் இரவில் குறைகிறது

[யாழ்ப்பாணம்]

கடந்த புதன்கிழமை முதல் யாழ் நகரில் இரவு நேரங்களில் மக்கள் நடமாட்டம் குறைந்துள்ளது.

சில தியேட்டர்களில் நேற்றும் இரவு இரண்டாவது படக்காட்சி காண்பிக்கப்படவில்லை.

பஸ்சேவை வழமையாகவிருந்த போதும் இரவு 7 மணிக்குப் பின்னர் யாழ், பஸ் நிலையத்தில் பிரயாணிகள் மிகக்குறைவாகவே காணப்பட்டனர்.

## ★ பாராளுமன்றத்தில் நேற்று 'சரத்'தின் உடுப்பு ஏற்படுத்திய சர்ச்சை!

(கொழும்பு)

கலவான எம். பி திரு. சரத் முத்தெட்டுவேகம நேற்று பாராளுமன்றத்திற்கு வந்த போது அவர் அணிந்திருந்த உடுப்பு குறித்து சர்ச்சை கிளப்பப்பட்டது.

திரு. சரத் முத்தெட்டுவேகம நேற்று வெள்ளை நீட்டுக்காற் சட்டையும், கறுப்புக்கோட், 'டையுடன்' சபைக்கு வந்திருந்தார்.

இவரது உடுப்பை அவதானித்த பொது நிர்வாக பிரதி அமைச்சர் திரு. ஹரேந்திர கொரியா, கலவான எம். பி. சபையின் நிரந்தர விதிகளுக்கு மாறாக மாறுபட்ட உடுப்புடன் வந்திருக்கிறார் என சபாநாயகரின் கவனத்துக்குக்கொண்டு வந்தார்.

அதற்கு சபாநாயகர், கலவான எம். பி. சரியான உடுப்புடனேயே சபைக்கு வந்துள்ளார் என்றும் அவரது உடுப்பு சபையின் நிரந்தர விதிகளை மீறவில்லை என்றும் தெரிவித்தார்.

ஒரு கட்டத்தில் திரு. முத்தெட்டுவேகம; உறுப்பினர் நாம் அணியும் ''உள்அங்கி'' பற்றிக் கேட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்றபோது சபையில் சிரிப்பொலி எழுந்தது! [ம-இ]

## வெரப்பிட்டிய மன்னார் விஜயம்

[மன்னார்]

மன்னார் மாவட்டத்தில் பாதுகாப்பு சம்பந்தமாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து பாதுகாப்பு பிரதி அமைச்சர் திரு ரி. பி. வெரப்பிட்டியா உயதிகாரிகளுடன் மகாநாடு ஒன்றைக் கூட்டி ஆலோசனை நடத்தினர்.

பிரதி பாதுகாப்பு அமைச்சர் நேற்று மன்னாருக்கு விஜயம் செய்திருந்தார்.

மன்னார் துறைமுக அபிவிருத்தி வேலைகளைப் பார்வையிட்ட பிரதி அமைச்சர் துறைமுகத்தை மேலும் விஸ்தரிப்பது சம்பந்தமாகவும் துறைமுகத்தில் பிரயாணிகள் எதிர்நோக்கும் கஷ்டங்கள் பற்றியும் ஆலோசனை நடாத்தினார். (மா)

### ''புங்குடுதீவு, நயினாதீவு:

## நிரந்தர உதவி அரச அதிபர் பிரிவுகளை அமைக்கவேண்டும்

### பாராளுமன்றத்தில் பண்டிதர் கோரிக்கை

[கொழும்பு]

''புங்குடுதீவு, நயினாதீவிற்கு நிரந்தரமான உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளை அமைக்க வேண்டும்'' என்று ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் நேற்று பாராளுமன்றத்தில் கோரிக்கை விடுத்தார்.

பொது நிர்வாக பிரதியமைச்சர் திரு. பேர்ஸி சமரவீர இதற்குப் பதிலளிக்கையில்:-- பணமில்லாததால் பல இடங்களில் நிரந்தரமாக உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளை உடனடியாக அமைக்க முடியாதுள்ளது. தற்

(8ம் பக்கம் பார்க்க)

## கைலாசநாதக் குருக்கள் மணிவிழா இன்று நடைபெறுகிறது

### கி. வா. ஜகந்நாதன் தலைமைவகிக்கிறார்

(யாழ்ப்பாணம்]

யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் பிரம்மஸ்ரீ கா. கைலாசநாதக்குருக்கள் அவர்களின் மணிவிழா இன்று சிறப்பாக நடைபெறுகிறது.

வண்ணார்பண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் இன்று மாலை நடைபெறும் இவ்விழாவுக்கு 'கலைமகள்' ஆசிரியர் வாகீச கலாநிதி திரு கி வா. ஜகந்நாதன் தலைமை வகிக்கின்றார்.

பிற்பகல் நான்கு மணிக்கு கானமூர்த்தி சகோதரர்களின் மங்கள இசையுடன் ஆரம்பமாகும் மணி விழாவில் பிரம்மஸ்ரீ ப. வித்தியானந்தக்குருக்கள் வரவேற்புரை நிகழ்த்த பிரம்மஸ்ரீ தி. கி. சீதாராம சாஸ்திரிகள் தலைமை உரை நிகழ்த்த இலக்கிய கலாநிதி பண்டிதமணி திரு சி. கணப

(8-ம் பக்கம் பார்க்க)

### பல்கலைக்கழக அனுமதி:

## திருமலை புறக்கணிக்கப்படுவதாக சம்பந்தன் பாராளுமன்றத்தில் புகார்!

[கொழும்பு]

''திருகோணமலை மாவட்டத்திலிருந்து கடந்த பல வருடங்களாக மிருகவைத்தியத்திற்கும் பல்வைத்தியத்திற்கும் ஒருவரும் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்படவில்லை. இந்த இரண்டு துறைகளுக்கும் பல்கலைக்கழக அனுமதியின் போது குறைந்தளவு இடங்களே ஒதுக்கப்படு

(8-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## தேவை

யாழ்ப்பாணம் ரோயல் டிஸ்பென்சறிக்கு நல்ல ஆங்கில கணித அறிவுள்ள பெண் உதவியாளர்கள் உடன் தேவை. நேரில் வரவும். 3772

2000 கியூப் மணல் ஏற்றி இறக்குவதற்கு ட்ரக்டர்கள் வாடகைக்கு உடன் தேவை. சிவபாதம் கிறஷர், அச்சுவேலி. 3783

எமது தயாரிப்புகளை வானில் சென்று விற்பனை செய்வதற்கு விற்பனையாளர்கள் தேவை. விண்ணப்பிக்க. பவுண் சோப் தொழிற்சாலை, சுந்தரமூர்த்தி கட்டிடம், 76, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3809

யாழ்ப்பாணத்தில் பிரபல வர்த்தக நிறுவனமொன்றிற்கு ஐந்து வருடத்திற்கு மேல் வியாபார அனுபவமுள்ள விற்பனை லிகிதர் (Sales Clerk) உடனடியாகத் தேவை. இவர் ஆங்கில அறிவு உடையவராயும், நல்ல எழுத்து எழுதக் கூடியவராயும், நாற்பது வயதுக்குக் குறைந்தவராயும், நம்பிக்கைக்குரியவராயும் இருத்தல் வேண்டும். தகுதி உள்ளவர்கள் எதிர்பார்க்கும் சம்பளத்துடன் 15-07-82முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 3812 C/பா, ஈழநாடு, யாழ்ப்பாணம். 8312

சேவிஸ்ரேசனில் வேலை செய்து அனுபவம் உடையவர்கள் உடன் தேவை. பரஸ்கோ லுப்றிக்கேசன் சேவிஸ், நல்லூர், யாழ்ப்பாணம். (3815)

வேப்பம் விதை தேவை மில்க்வைற், யாழ்ப்பாணம். (3818)

ரிங்கர் வேலையில் அனுபவமுள்ள வேலையாட்களும், உதவியாளர்களும் பெயின்ற் வேலை பழகுபவர்களும் தேவை. விண்ணப்பிக்கவேண்டிய முகவரி: உரிமையாளர், அற்லஸ் இன்டஸ்றீஸ், 297 பருத்தித்துறை வீதி, வீரமாகாளி அம்மன் கோவில் முன்பாக, யாழ்ப்பாணம் (3816)

## வாடகைக்கு

ஸ்ரான்லி வீதியில் சகல வசதிகளுடன்மேல்மாடிக்கட்டிடம் வாடகைக்கு/குத்தகைக்குண்டு. ஏஜன்சி கவுஸ், ஸ்ரோஸ், டிஸ்பென்சரிக்கு உகந்தது. தனித்தனி அறையாகவும் கொடுக்கப்படும். தொடர்பு: V. S. கனகரத்தினம் கச்சேரி, முல்லைத்தீவு. 3765

## விற்பனைக்கு

அரசாங்க அலுவலரின் சொந்தப்பாவனையில் சிறந்த நிலையிலுள்ள 9 சிறி தொடர் பிலக்க 'ஹில்மன் அவென்ஜர்' (Hillman Avenger)கார் நியாய விலையில் உடனடி விற்பனைக்கு உண்டு. பெயின்ற், டயர்கள், பற்றறி அனைத்துமே புதியவை. தொடர்பு: ஸ்ரீதரன், மின்சார சபை, சுன்னாகம். லீவு நாட்களில் ஊரிக்காடு, வல்வெட்டித்துறை. 3820

3½ தொன் Globe Hoist விற்பனைக்குண்டு. தொடர்பு: பரஸ்கோ லுப்றிக்கேசன் சேவிஸ், நல்லூர், யாழ்ப்பாணம். (3814)

7-ம் நம்பர் அல்லர் F பான் பெட்டியுடன் 12 இஞ்சி கிறைண்டர் உடன் விற்பனைக்குண்டு. தேவாஸ் கிறைண்டிங் மில், 159/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [3825]

புத்தம்புதிய தஞ்சாவூர் வீணைகள் இரண்டு உடனடியாக விற்பனைக்குள்ளன. தொடர்பு; க. சிவலிங்கம், 134, பிரதானவீதி, யாழ்ப்பாணம். [3821]

ாவடி சந்திக்கு அருகாமையில் உள்ள ஆனந்தா றெக்கோடிங் பாரில் புத்தம்புதிய பயணியர் செற், பிசர் செற் விற்பனைக்குண்டு. [3796]

சுன்னாகம்
பல நோக்குக்
கூட்டுறவுச் சங்கம்
(வரைவுள்ளது)

சுன்னாகம்

### பதவி

### வெற்றிடம்
லொறிச்சாரதி

மேற்குறிந்த பதவிக்கு யாழ் மாவட்டத்தில் வசிப்போரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்பத்திரங்களையும் ஏனைய விபரங்களையும் சங்க தலைமை அலுவலகத்தில் ரூபா 2/- செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பங்கள் 20-7-82 வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

பொது முகாமையாளர்.
சுன்னாகம் ப. நோ. கூ. சங்கம்,
சுன்னாகம்,
07-07-82. (3811)

## தே வை

1. ஆபீஸ் உதவியாளர்
வவனியாவில் இருக்கும் எமது ஸ்தாபனத்துக்கு ஆபீஸ் உதவியாளர் தேவை.
தமிழில் கணக்கு எழுதக்கூடியவரும், ஆங்கில தட்டெழுத்து தெரிந்தவராயும் இருத்தல் வேண்டும்.
2. மெக்கானிக்குகள்
எலெக்ரிக் மோட்டோர் பைப், வயரிங்வேலை செய்யக்கூடியவரும் நீர் இறைக்கும் இயந்திரம் திருத்தக்கூடியவராயுமிருத்தல் வேண்டும்.

உடனே விண்ணப்பிக்குக

### ஓட்டோஸ் ஏஜென்சீஸ்
109, கண்டி வீதி, வவுனியா.

(3807)

## FOR SALE

Morris Oxford Diesel—One Owner—Highest offer considered—Inspection at 9, Tenth Lane, Colombo 3. Telephone: 82776. [3797]

## CLASSES

Qualified Accountants Conduct Lectures leading to the following exams. Preliminary and Licenciate of I.C.A. Foundation A and B, P.I. of I.C.M.A, All levels —I.A.A. and I.B.K. Call over for enrolment at Management Information Service, 68, Kannathidy Road, Jaffna. 3823

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட
நீதிமன்றம்

வட்டுக்கோட்டை அராலி தெற்கைச் சேர்ந்த அம்பலவாணர் செல்லத்துரை என்பவரின் மரணசாதனமில்லாத மரணச்சொத்துக்களினதும் உடமைப் பொருள்களினதும் விடயத்தில்.

மரணமெய்தியவர்

மரணசாதன
நியாயாதிக்கம் இல ரி. 117

அம்பலவாணர் செல்லத்துரை கைம்பெண்நாச்சிப்பிள்ளை அல்லது சரஸ்வதி, கேணிக்கரை அளவெட்டி வடக்கு, அளவெட்டி.

மனுதார்

1. செல்லத்துரை சசிசேகரன்
2. செல்லத்துரை சசிசேயோன்
3. செல்லத்துரைசசிகயன்
4. செல்லத்துரை மகள் உமா
5. செல்லத்துரை மகள் உமை எல்லோரும் பராயமற்றவர்கள் தங்கள் பாதுகாவலர் 6ம் எதிர்வாதி மூலம் அளவெட்டி வடக்கு
6. அம்பலவாணர் தப்பிராசா பராயமற்ற 1-5ம் எதிர்மனுதார்களின் பாதுகாவலராக அராலி தெற்கு, வட்டுக்கோட்டை.

எதிர்மனுதார்கள்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதமணிங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1982ம்ஆண்டு ஆடிமாதம் 21ம் திகதி முற்பகல் 9மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றான கட்டளையாக்கப் படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1982ம் ஆண்டு ஆடி மாதம் 5ந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி
சு. வ. கணேசன்,
பதிவாளர்.

தயாரித்தவர்:
க. குணரத்தினம்,
மனுதாரின் சட்டத்தரணி.
3824

### வியாபாரம் பெருக
### விளம்பரம் செய்க

# இருதினங்கள்
## யாழ். நகரில் பதற்றம்!

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் கடந்த புதன் வியாழன் இரு தினங்களும் யாழ். நகர் அமளிதுமளிப்பட்டது. பொதுமக்கள் பீதியுடன் கால்போன போக்கில் சிதறி ஓடினர்.

யாழ். நகரில் உள்ள தியேட்டர்களில் முதலாவது காட்சி முடிந்து, வீடு செல்வதற்கு பஸ்நிலையம் நோக்கிச் சென்றவர்களில் சிலர், சீருடை அணிந்தவர்களால் தாக்குதலுக்கு உள்ளானதாகவும், இதனால் ஆண்களும், பெண்களும், சிறுவர்களும் அங்குமிங்குமாகச் சிதறி ஓடியதாகவும் தெரிய வருகிறது.

இதேநேரம் ஒருவழிப்பாதையால் சென்றவர்களின் சைக்கிள்களின் டயர்களின் காற்றுத் திறந்து விடப்பட்டனவாம்.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து அதிகமான கடைகள் பூட்டப்பட்டன.

சனநடமாட்டம் குறைந்ததால் சில தியேட்டர்களில் 2-வது காட்சி நடைபெறவில்லை என தியேட்டர் உரிமையாளர்கள் தெரிவித்தனர். (மா)

## ''ஒரு கோடைவிடுமுறை' நூல்:
# லண்டன் தமிழர்களின் வாழ்க்கைசிறப்பாகசித்திரிப்பு

[யாழ்ப்பாணம்]

''வெளிநாடுகளிற்குச் சென்று குடியேறியுள்ள தமிழர்களின் வாழ்க்கையைப் பற்றிய இலக்கியப் படைப்புகள் அதிகம் வெளிவரவில்லை. ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் எழுத்துக்களில் லண்டனிலுள்ள தமிழ் மக்களின் வாழ்க்கை சிறப்பாகச்சித்திரிக்கப்பட்டுள்ளது.'' பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் சென்ற ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நூல் விமர்சனக் கூட்டத்தில் ராஜேஸ்வரி சுப்பிரமணியத்தின் 'ஒரு கோடைவிடுமுறை' நாவலை விமர்சிக்கையில் எழுத்தாளர் செ. கணேசலிங்கன் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் பேசுகையில், ''லண்டனிலும் சாதி உணர்வு நிலவுவது, சடங்குகள் பேணப்படுவது என்பன சுட்டிக்காட்டப்படுவது சிறப்பாகவுள்ளது. அரசியற் சம்பவங்களை இணைத்திருப்பது, குறிப்பாக இனக்கலவரம், தேசிய இனப்பிரச்னைபற்றிக் குறிப்பிடப்படுவதும் முக்கியமானது

எனினும் வீர புருஷர்கள் இல்லாதிருப்பதும், இனப் பிரச்னை, பெண்விடுதலை போன்றவற்றுக்குத் தீர்க்கமான, விஞ்ஞானபூர்வமான வழிகளைக்காட்டாததும் நாவலின் குறைபாடாகும். சோசலிசத்தின் கீழ் இனப் பிரச்னைகள் தீர்க்கப்படுமென்பதை இந்த நாவல் சொல்லாதது குறைபாடாகும்'' என்று சொன்னார்.

'மார்க்சியமும்இலக்கியமும்-சில நோக்குகள்' நூலைப்பற்றித் திரு. அ. யேசுராசா பேசுகையில் 'கலை, இலக்கியத்தின் அடிப்படைகள் பற்றியும், 1920களில் ரஷ்யாவில் நிகழ்ந்த இலக்கிய விவாதங்கள் பற்றிய வரலாற்றறிவையும் 'தமிழ் மட்டும்' தெரிந்த வாசகனும் அறிந்து தெளிவுபெற இந்நூல் உதவுவதால் மிக முக்கியமானதாகின்றது. இத்தகைய நூல்கள் மேலும் வெளியிடுதல் அவசியம்'' என்று குறிப்பிட்டார்.

பார்வையாளர்கள் கலந்துரையாடலின்போது திருமதி நிர்மலா நித்தியானந்தன், திரு. நா. தர்மலிங்கம், திரு. விக்னேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இறுதியில் இலங்கை அவைக்காற்று கலைக்கழகத்தின் 'மரபு' என்ற நாடகமும் திரு. க. பாலேந்திராவின் நெறியாள்கையில் நடைபெற்றது. திரு. எஸ். எப். ஜே. பைஸ்தீன் கூட்டத்திற்குத் தலைமைதாங்கினார்

## முதலிலேயே விதிக்கப்பட்ட
## பூரணதீர்ப்பு

மாவட்டநீதிமன்று
பருத்தித்துறை

இல 1136 / T

இறந்த வேலுப்பிள்ளை சீவரத்தினத்தின் மரணசாதனம் சம்பந்தமாக சீவரத்தினம் கைம்பெண் நாகரத்தினம் தும்பளை, பருத்தித்துறை.

—மனுதார்

இவ்வழக்கு பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் மேலே குறிப்பிட்ட இறந்தவரின் மரணசாதனத்தை ஒப்பேற்றுவதற்காக தாக்குதல் செய்யப்பட்டது. எனவே முதலிலேயே விதிக்கப்பட்ட பூரண தீர்ப்பு 1982ம் ஆண்டு மாசி மாதம் 9ஆம் திகதி பதியப்பட்டுள்ளது.

1982ம் ஆண்டு ஆனி மாதம் 8ம் திகதி.

மன்றின் கட்டளைப்படி
(ஒப்பம்)
க. செல்வராசா,
பதிவாளர்.

இ. சதானந்தன்,
சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும்,
புலோலி தெற்கு- புலோலி.
3691

## தின விழா

நீர்வேலி சர்வதேசகூட்டுறவு தினவிழா 1982ம் ஆண்டு ஆடி மாதக்கடைசிவாரத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாட ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. வலிகாமம் கிழக்கு தென்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் இதனை நடாத்துகிறது.

பாடசாலை மாணவர்களுக்கிடையிலான பேச்சு சங்கீதப் போட்டிகள், அங்கத்தவர், மகளிர் குழுக்களுக்கான கவிதைப்போட்டிகள், விற்பனை நிலையங்களுக்கிடையே போட்டிகள், மாட்டுவண்டில் சவாரிப்போட்டி, சைக்கிள் ஓட்டப்போட்டி, கலைவிழா ஆகியன நடைபெற ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.


'பியர்'அதன் முழுச் சுவையுடன்.

லயன் லாகர்




ரூபா 15/75

# லெபனுனுக்கு அமெரிக்கா படை அனுப்பினுல்

# சோவியத்கொள்கையிலும் மாற்றம் ஏற்படும்!

## அமெரிக்காவுக்கு சோவியத் அதிபர் எச்சரிக்கை

மாஸ்கோ, ஜூலை. 9

**லெபனுனுக்கு அமெரிக்காபடைகளை அனுப்பினுல் சோவியத் யூனியன் தனது கொள்கைகளில் மாற்றங்களைச் செய்யவேண்டிவரும் என்று சோவியத் அதிபர் பிரஷ்நேவ் அமெரிக்காவை எச்சரிக்கை செய்துள்ளார்.**

லெபனுனுக்கு அமெரிக்கா படைகளை அனுப்பப்போவதாகவும், இப்படையினர் அவதானிகளாக அங்கு கடமையாற்றி, பாலஸ்தீனியர்கள் வெளியேறுவதைக் கவனிப்பதுடன், இஸ்ரேலியத் தாக்குதல்கள் பற்றியும் அறிந்து கொள்வார்கள் என்று முன்னர் வெள்ளை மாளிகைப் பேச்சாளர் ஒருவர் கருத்து வெளியிட்டிருந்தார்.

இதுகுறித்து சோவியத் அதிபர் கருத்து வெளியிடுகையில் லெபனுனுக்கு அமெரிக்கப் படைகள் அனுப்பப்படுவது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்றும், சோவியத் தனது கொள்கையில் பெரும் மாற்றங்களைச் செய்ய வேண்டிவரும் என்றும் எச்சரித்துள்ளார்.

சோவியத் அதிபரின் இக்கருத்தைக் குறித்து வெள்ளை மாளிகை உடனடியாக கருத்து எதுவும் வெளியிடவில்லை என்றுலும், அமெரிக்கா லெபனுனுக்கு படைகளை அனுப்பமாட்டாது எனத் தெரியவருகிறது

## “லெபனுனில் இரத்தக்களரி ஏற்படுவதைத் தவிர்க்குக”

பெய்ரூட். ஜூலை 9

லெபனுனில் மீண்டும் இரத்தக்களரி ஏற்படுவதைத் தவிர்க்க இயன்றளவு முயற்சிகளை எடுக்குமாறு சோவியத் ஜனுதிபதி திரு. லியோனிஸ்ட் பிரஷ்னெவ் அமெரிக்காவைக் கேட்டுள்ளார்.

அமெரிக்கப்படைகள் லெபனுனிற்கு அனுப்பப்பட்டால் அங்கு மோசமான நிலை உருவாகுமென்றும் திரு. பிரஷ்னெவ் தெரிவித்துள்ளார்.

பாலஸ்தீனியர்களுக்கு இந்தியாவின் ஆதரவு உண்டென்றும்; அவர்களுக்கு உதவுவதற்காக லெபனுனிற்கு இந்திய வைத்தியர்கள் கொண்ட குழுவொன்று மருந்துவகைகளுடன் அனுப்பப்பட்டுள்ளதாக வெளிநாட்டமைச்சர் திரு. நரசிம்ம ராவ் நேற்று இந்தியப் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அதேவேளை ஜோர்டானின் மேற்குக் கரைப பகுதியில் வாழும் பாலஸ்தீனியர்கள் இஸ்ரேலுக்கு எதிராக ஆர்ப்பாட்டமொன்றை நடத்தியதாகக் கூறப்பட்டது. இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பல பல்கலைக்கழக மாணவர் கைதுசெய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஜோர்டானின் மேற்குக் கரையில் 13 லட்சம் பாலஸ்தீனியர்கள் வசிக்கிருர்கள். இப்பிரதேசம் 1967-ம் ஆண்டு யுத்தத்தின்போது இஸ்ரேலிஞல் ஆக்கிமிக்கப்பட்டது தெரிந்ததே. (வெ)

## ஆசிரியர் சரவணமுத்துவுக்கு யாழ்இந்து அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

“மாணுக்கர்கள் முன்னேற்றமே அமரர் ஏ. சரவணமுத்துவின் கனவு. கல்லூரியின் வளர்ச்சியே அருடைய ஊழியம் சனி ஞாயிறு பாராது வீட்டிலிருந்து சுடச்சுட காப்பியை பிளாஸ்கில் கொண்டு வரச் சொல்லிவிட்டு, தலையில் ஒரு லேஞ்சியைப் போட்டுக் கொண்டு மழை, வெயிலைப் பொருட்படுத்தாது கல்லூரிப் புறவேலைகளையும் கண்காணித்தவர்” என்று யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் நீண்ட காலம் சேவைசெய்த ஆசிரியர் திரு. ஏ. சரவணமுத்துவின் அஞ்சலிக்கூட்டத்தில் கல்லூரி அதிபர் திரு பொ ச குமாரசாமி பேசுகையில் குறிப்பிட்டார். கல்லூரி பிரார்த்தனை மண்டபத்தில் இவ் அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது.

கல்லூரி அதிபர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:–

“இக்கல்லூரிக்கும் அவருக்குமிடையே யிருந்த நேயப்பாடு சொல்லுந் தரமன்று” இரசாயனப் போதனுசிரியராயிருந்து பின்னர் பௌதிகத் துறைப் பொறுப்பை ஏற்று அவர் வளர்த்துவிட்ட மருத்துவர்கள், பொறியியலாளர்கள் இலங்கையிலும் பிறநாடுகளிலும் அரிய சேவைபுரிந்து புகழீட்டுவது திரு. சரவணமுத்துவின் மாணவர்களாகிய எமக்கெல்லாம் பெருமைதருவதாகும். வானொலி கேட்பது அவருடைய பொழுதுபோக்கு. எல்லா நாடுகளிலும் ஒலிபரப்பாகும் செய்திகளை ஒழுங்காகக் கேட்பார். அவற்றைப் புணர்த்தி அவர் கொள்ளும் ஊகமும் விளக்கமும் சில சமயம் வேடிக்கையாகவும் இருந்தாலும் இறுதியில் நிகழ்வுகளை அவதானிக்கும்போது எவ்வளவு தீர்க்க திருஷ்டியுடையவர் அவர் என்பது புலனுகும். அவரைப் போன்ற ஆசிரியர்கள்–சுயநலமற்ற, பிரதிபலன் கருதாத ஆசான்கள் – இனிப் பிறப்பார்கள் என்பது சந்தேகமே. அவருடன் ஒரு சகாப்தமே முடிவடைகிறது. அதற்கு ஈடுசெய்ய எவராலும் முடியாது.”

ஆசிரியர் திரு. க. சிவராமலிங்கம் பேசுகையில் கூறியதாவது:

“ஆசிரியர்களாக உள்ள எங்களிடம் மாணவர்களாகிய நீங்கள் எதிர்பார்க்கும் நற்பண்புகள் ஏதாவது காணப்பட்டால் அவற்றைத் தோற்றுவித்தபெருமை அமரர் ஏ. சரவணமுத்து அவர்களையே சாரும்”.

‘பழகஇனியவர். முற்போக்குக் கருத்துகளைக் கொண்டவர். எவர்க்கும் உதவும் பண்பாளர். மென்மையான உள்ளம் படைத்தவர். இவருடைய சேவை உணர்வும் மாணுக்கர் வளர்ச்சியில் காட்டிய ஈடுபாடும் பலரையும் ஈர்த்தன. விடுதிச்சாலை உதவி அதிபராக சிலகாலம் இருந்த தன் நிர்வாகத்திறனை நிலைநாட்டியவர். என்கடன் பணிசெய்து கிடப்பதே என்பதற்கமைய

(6-ம் பக்கம் பார்க்க)

## சேபாலவின் நண்பர் எட்வேட் இராமேஸ்வரத்தில் கைது!

சென்னை, ஜூலை. 9

விமானக்கடத்தல்காரர் சேபால எக்கநாயக்காவின் உதவியாளர் என்று கருதப்படும் பண்டார எட்வேட் என்பவர் இந்திய பொலிசாரிஞல் கைது செய்யப்பட்டுள்ளார்!

பண்டார எட்வேட் இராமேஸ்வரத்தில் வைத்து கைது செய்யப்பட்டார். இவர் இப்பொழுது சென்னையில் பாதுகாப்பில்வைக்கப்பட்டுள்ளார்.

பொலிசாருக்கு அளித்த வாக்குமூலத்தில்; சேபால எக்கநாயக்காவை தாம் சென்னையில் சந்தித்ததாகவும் தமக்கு உதவி செய்யுமாறு அவர் கூறி புதுடில்லிவரை அழைத்துச் சென்றதாகவும் பண்டார எட்வேட் தெரிவித்துள்ளார்.

இத்தாலியில் தமக்கு வேலை பெற்றுத்தருவதாக எக்கநாயக்கா வாக்கு அளித்திருந்ததாகவும் எட்வேட் தெரிவித்துள்ளார்,

சேபால எக்கநாயக்காவும் இவரது சகாக்களும் போதைவஸ்து கடத்தலில் ஈடுபட்டிருந்தார்களா என்பது குறித்தும் பொலிசார் விசாரணை செய்துவருகின்றனர்.

## கிராமோதய சபைத் தலைவர்

[புலோலி]

துப்பளை நெல்லண்டை பத்திரகாளி அம்பாள் ஆலய பரிபாலன சபைத் தலைவர் திரு. எஸ். எம். கந்தசாமி தும்பளை கிராமோதய சபைத் தலைவராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

பிரபல வர்த்தகரும் சமூக சேவையாளருமான திரு. கந்தசாமி நோர்வே–தும்பளை அபிவிருத்தி மன்றத்தின் இயக்குநகராகவும் சேவைபுரிந்துவருகின்றுர்.

## மாவைக்கந்தன் 15-ம் திருவிழா

(யாழ்ப்பாணம்)

இன்று மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் 15-ம் திருவிழா பெரியபுராணத்தொடர் சொற்பொழிவில் திருமூலர் பற்றி திரு. க, விநாயகமூர்த்தி அவர்கள் பேசுவார்கள்.

## மாடிக்கூரையை சேதமாக்கிய விமானச் சக்கரங்கள்!

வின்னிபெக், ஜூலை 9

கனடாவின் ‘வின்னிபெக்’ விமானநிலையத்துக்கு சற்றுத் தொலைவிலிருந்த மார்க்போல் என்பவரது அடுக்குமாடிவீட்டுக்கூரையை விமானமொன்றின் சக்கரங்கள் சேதப்படுத்தியதில் வீட்டின் கூரையும் உள்மண்டபமும் சேதமடைந்தன. ஆனுலும் விமானத்துக்கு எதுவிதபாதிப்பும் ஏற்படவில்லை அது சுமுகமாகத் தரைஇறங்கியது!

இத்தகைய சம்பவம் மிகவும் அரிதான தொன்றெனத் தெரிவிக்கப்பட்டிருப்பதுடன் ஓடுபாதையை அண்மிக்க முதலே வெகு தொலைவில் விமானத்தின் சக்கரங்கள் கீழிறங்கியதற்கான காரணங்களும் ஆராயப்படுவதாக விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர். (கி)

## ★ மகாதேவா தாம்போதி வேலைகள்:

## சிரமதானப் பணிகளில் சனசமூக நிலையங்களும் ஈடுபடவேண்டும்!

### ‘யோகேஸ்’ கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

“வடபகுதியின் அபிவிருத்தி வேலைகளில் அரசாங்கம் எவ்வித அக்கறையும் காட்டுவதில்லை. மகாதேவா தாம்போதியை கட்டித்தருமாறு பல ஆண்டுகளாக தொடர்ச்சியாக நாம் விடுத்த கோரிக்கையை அரசு செவிசாய்க்கவில்லை. 200 லட்சம் ரூபா மதிப்பிடப்பட்ட மேற்படி திட்டத்திற்கு வடபகுதி பாராளுமன்ற உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்து நாம் அளித்த பணத்திலிருந்தே வேலைகள் ஆரம்பிக்கப்பட்டது எனவே எமது பகுதிகளிலுள்ள சனசமூகநிலைய உறுப்பினர்கள் சனி, ஞாயிறு நாட்களில் அங்கு சென்று சிரமதானப் பணிகளில் ஈடுபடவேண்டுமென கேட்டுக்கொள்கின்றேன்.”

இவ்வாறு யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலையத்தில் 12–வது ஆண்டு விழாவில் கலை அரங்கத்தை சம்பிரதாயபூர்வமாக திறந்துவைத்து உரைநிகழ்த்துகையில் குறிப்பிட்டார். தொடர்ந்து உரையாற்றுகையில் அவர் குறிப்பிட்டதாவது;

சனத்தொகைப் பெருக்கத்தால் யாழ். குடாநாட்டில் மிகுந்த சனநெருக்கடி ஏற்பட்டுள்ளது. மகாதேவா பாலம் பூரணமாக அமைக்கப்பட்டால் இங்குள்ள மக்கள் மன்ஞர்பகுதிகளில் சென்று குடியேற வாய்ப்பு ஏற்படுவதுடன போக்குவரத்துச் சிரமங்களும் குறையும். வடபகுதியின் அபிவிருத்திவேலைகளை அரசு எவ்வாறு புறக்கணிக்கின்றதோ அவ்வாறே தமிழரின் கலை கலாசார வளர்ச்சிகளிலும் அக்கறை காட்டுவதில்லை. மாருக பெரும்பான்மை மக்களின் கலை, கலாசார, மதமேம்பாட்டிற்கு முன்னின்று உழைத்துவருகிறது.

600 நோயாளர்களுக்காக கட்டப்பட்ட யாழ். அரசினர் ஆஸ்பத்திரியில் இன்று 2000 பேர் சிகிச்சை பெறும் நிலை உள்ளது. ஏறத்தாழ1000க்கும் மேற்பட்ட நோயாளிகள் நிலத்தில் தான் படுத்துறங்குகின்றுர்கள். எனவே எமது மக்களின் இத்தகைய சிரமங்களை தவிர்க்க அபிவிருத்திப் பணிகளை நாம் மேற்கொள்ள வேண்டிஉள்ளது. மறுபுறத்தே தமிழர்களுக்கு அடுத்த நிமிடம் எது நடக்குமோஎனும் பதட்ட நிலையும் உள்ளது. எமது மனதிற்கு சரியெனத் தோன்றுவதை நாம் செய்யத்தான் வேண்டும் இளைய தலைமுறையினர் தலைவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் நடந்துபழகவேண்டும். அர்த்தமின்றி ஆயுதப் படையினரை கண்டு ஓடி அவமரியாதை தேடிக்கொள்ளக் கூடாது. சிந்தித்து, தலைவர்களின் வழிகாட்டலின் கீழ் இளைஞர்கள் செயலாற்றப் பழகுவதற்கு சனசமூக நிலையங்கள் வழிகாட்டும் கலங்கரை விளக்காக விளங்கும் என்று நம்புகின்றேன் என்றுர்

### மேயர் கோரிக்கை

யாழ். மாநகரசபை முதல்

(6–ம் பக்கம் பார்க்க)

### மணிவாக்கு

நிர்தனைக்காரனைக் கண்டிக்காதே; அவன் உன்னைப் பகைப்பான் அறிவுள்ளவனைக் கண்டித்தால் உன்னை நேசிப்பான். — பைபிள்

## நமது நோக்கு

### சாதிப் பெயர்கள்

''உங்கள் பெயர் ராமசாமி?'' என்று கேட்கிறார் ஒரு அரசாங்க அதிகாரி.

'ஆம்' என்கிறார் திரு. ராமசாமி.

'இந்தியாவா?' என்றது அடுத்த கேள்வி

''இல்லை. நான் யாழ்ப்பாணம்'' என்பது விடை.

''ஆகா! சிலோன் தமிழ் என்று இங்கேயே குறிப்பிட்டிருக்கிறது. இந்தியப் பெயர் போலிருந்தபடியால் நான் தவருகப் புரிந்து கொண்டேன்'' என்றொரு மன்னிப்புக்கோரும் குரலில் அதிகாரி சம்பாஷணைக்கு முடிவுகட்டுகிறார்.

சாதிப் பெயர்கள் மட்டுமல்ல; இனப்பெயர்களே துவேஷம் உண்டு பண்ணுவது இன்றும் வழக்கிலிருக்கின்றது.

இந்தியத் தமிழர்களைப் பிரித்துநோக்கும் சந்தேக மனப்பான்மை, பெரும்பான்மைச் சமூகத்தினரிடம் இருந்துவருவதை இச்சம்பாஷணை விளக்குகிறது.

யாழ்ப்பாணத்தமிழர்கள் மத்தியிலுமே 'ஐயர்' என்று பெயர்முடிவதை அவர்களே விரும்புவதில்லை பிராமணர்களுக்குரித்தான சொல் இன்று மறைக்கப்படுவதை பலர் விரும்புகின்றனர்.

எனவே பெயரின் விபரீத வரலாறு சாமானியமானதல்ல; பெயர்கள் இருவகைப்படும் என்று படித்த இலக்கணம் இன்று மாற்றப்படவேண்டியிருப்பதை அறியாதவர் யார்?

''பெயரில் என்ன அர்த்தம் இருக்கிறது; ரோசா மலரை எவ்வாறு குறிப்பிட்டாலும் அது நறுமணம் வீசும் மலரே'' என்றொரு ஆங்கில வாசகம் உண்டு.

அது நாம் குறிப்பிடும் விடயத்துக்கு பொருத்தமானதல்ல. சாதிப்பெயரால் ஒருவரை உயர்த்துவதும், இன்னொருவரைத் தாழ்த்துவதும் சமுதாயத்தில் வேரூன்றிவரும் வழக்கம்.

''சாதி பேதங்கள் முற்றுகஎம்மத்தியிலிருந்துஒழிக்கப்பட வேண்டும்; இது எல்லோராலும் இன்றுஒப்ப முடிந்த ஒரு உண்மை'' என்று வடபகுதி அரசாங்க அதிபர் திரு தேவநேசன் நேசையா அண்மையில் ஒரு பகிரங்கக் கூட்டத்தில் பேசியிருப்பது எமது கவனத்துக்குரியது.

அரசியல்வாதிகள் சமூக சீர்திருத்தக்காரர் பலர் இவ்வாறு வருடக்கணக்கில்பேசி வருவது நாடறிந்தது.

இவ்வித பேச்சால், அதற்குரிய செயலால் மாற்றம் ஏற்படவில்லையென்று கொள்வது தவறு; ஆயினும், இரத்தத்துள் ஊறிய நஞ்சை அகற்றுவது கடினம். தீவிர நடவடிக்கைகள் தானும் எதிர்பார்க்கும் திருத்தங்களை ஏற்படுத்தி விடமாட்டா.

சட்டத்தாலும் ஏனைய பழக்கவழக்க மாற்றங்களாலும் நல்ல நிலைபெறக்கூடிய நன்மைகளை ஆக்கமுடியும்; மக்கள் மனமாற்றம் பேச்சால் உண்டாகாது.

இந்த வகையில் திரு. தேவநேசன் நேசையா குறிப்பிட்டதொருதிட்டவட்டமான நடவடிக்கை கணிசமான மாற்றத்தை ஏற்படுத்த வல்லது.

தொழிலைக் குறிக்கும் சாதிப்பெயர்கள் அழியுபுச் சாட்சிப் பத்திரத்திலிருந்து நீக்கப்படுவதே நாம் குறிப்பிடுகின்றோம்; அது நல்லது அவசியமானதுங்கூட.

இத்தகைய மாற்றங்கள் காலகதியில் மக்கள் மனப்போக்கை மாற்றப்பெரிதும் உதவும்.

### யாழ்ப்பாணத்தின் பதற்ற நிலை

துன்பச் செய்தியைக் கொண்டுவரும் தந்திக்காரனை வீட்டுக்காரர் தாக்குவது அந்தக் காலம்.

''பழைய தபால், தந்திக்காரன் இருந்த காலத்தில் இவ்வித அபாய செய்திகள் இடைப்படவில்லையே. இப்போதுதான் இந்த அநியாயம்'' என்று ஆத்திரங்கொள்வது அறியாமையின் விளைவு.

இன்று இவ்வித திடீர்த் தாக்குதல் எங்கும் நடக்குமென்று நாம் நம்பவில்லை; விடயம் புரியக்கூடிய அளவில் நாகரிகமாக நடக்க மக்கள் பழகிக் கொண்டனர்.

இந்நிலையாகி சிலகாலமாக யாழ்ப்பாணத்தின் காவற்படையினரைப் பிடித்திருப்பது மக்கள் கூட்டத்துக்குப் பெரும் மனக்குழப்பத்தையும் கிலியையும் ஏற்படுத்தி வருகிறது.

மாவட்டத்தில் எந்த ஒரு இடத்திலும் பயங்கரவாதச் சம்பவம் நடைபெற்றால் தாக்கத்துக்குள்ளாகிறவர் குறிப்பாக யாழ் நகரில் நடமாடும் அப்பாவி மக்கள்.

கொடிய பயங்கர சம்பவம் ஒன்று நடைபெற்றுவிட்டால் அச்சுறுத்தலில் மக்களைக் காப்பாகவும், பயபக்தியாகவும் நடந்துகொள்ளவேண்டியது நியாயமாகும். நெல்லியடியில் இன்று அப்படி இருக்கிறது.

எவ்வித முன்னறிவித்தல் இல்லாமல், ஊரடங்கவேண்டிய கட்டளை பிறப்பிக்காமல், தத்தம் தொழிலில் நடமாடும் மக்களை காவற்படையினர் தாக்குவது அவர்களது ஆத்திரம் தீர்க்கும் செயலாகும். மக்களைப் பொறுத்தளவில், காவற்படையினரிலும், ஆட்சியாளர்களிலும் வெறுப்பு உண்டாக்கும் மூடச் செயல் இது என்றே நாம் கருதுகிறோம்.

பயங்கரவாதத்தை ஒழிக்கும் நடவடிக்கைகளில் பொதுமக்களை அல்லற்படுத்தும் ஆத்திரச் செயல்கள் தொடருமாயின், அது நிலைமையை மோசமாக்குமே; அமைதியை எவ்விதத்திலும் வளர்க்கமாட்டாது.

ஆட்சிக்கும் மக்களுக்கும், அதிகாரிகளுக்கும் சாதாரண ஆட்களுக்கும், பிணக்கும் பேதமும் வளர்க்கும் விவேகமற்ற செயலென்பதை நாம் வற்புறுத்த வேண்டும்.

மக்களை கெடுக்கலக்க எந்த அரசுக்கும் உரிமை இல்லை. அவசரகாலத்தில் ஊரடங்குச் சட்டமே அவதானமாக அமுல்நடத்தப் படவேண்டியது. சட்டம் ஒழுங்கு பேணப் படுவதற்கு காவற்படையினர் முன்மாதிரியாக விளங்க வேண்டும்.

### மணிவிழாக்காணும் பேராசிரியர் கைலாஸநாதக்குருக்கள்

# இந்துப்பண்பாட்டின் உறைவிடமாகத் திகழ்பவர்

(பேராசிரியர் பிரம்மஸ்ரீ கா. கைலாஸநாதக் குருக்களின்மணிவிழா இன்று வண்ணார்பண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் இடம் பெறுவதையெட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.)

சி. சரவணபவன்

இந்துப் பண்பாட்டின் இன்றியமையாத அம்சமான ஒரு சிறிய குடுமி; கள்ளமற்ற உள்ளத்தைப் பிரதிபலிக்கும் வெள்ளை ஆடை; அகன்றநெற்றியை அலங்கரிக்கும் அம்பாளின் நாளாந்தப் பிரசாதமான குங்குமப் பொட்டு; மலர்ந்த முகம்; களங்கமற்ற புன்னகை; பார்த்தவுடன் பழகத் தூண்டும் தோற்றம் — கைலாசநாதக் குருக்கள் என்ற மனிதரை அடையாளங் காட்டுபவை இவை.

ஆனல், அவரிடம் இருக்கின்ற ஆழ்ந்த அறிவை அறிவால் விளைந்த பணிவை, பணிவுடன் இணைந்தஇன்சொல்லை, இனிமையுடன் விரவிய தெளிவை, தெளிவின் காரணமான தூய சிந்தனையை, அரிய தத்துவத்தை. அன்பு நெஞ்சத்தை— அறிவுக் களஞ்சியம், வேதவித்து, சிந்தனைச் செல்வம், பண்புக்கோபுரம் போன்ற தனிச் சொற்கள் சரியாக வர்ணிக்க முடியாமற் தடுமாறி நிற்கும் என்பதுண்மை. இவை அனைத்தும் சங்கமித்து நிற்கும் சத்தியசீலன் அவர்.

பழுத்த பழமாக—நிறைகுடமாக—பண்பின் உறைவிடமாகப் பல்லோரின் ஏற்றுதலுக்கும் போற்றுவதலுக்கும் இலக்காகி, ஈழத்துப் பண்பாளர்களால் மணி விழா எடுத்துப் பாராட்டுமளவிற்கு உயர்ந்திருக்கின்றார் என்றால், அதற்கெல்லாம், அவர் இளமையில் வாழ்ந்த சூழ்நிலையும் வளர்ந்த முறையும் பெருமளவிற் காரணம் எனலாம். துள்ளித் திரிகின்ற பிள்ளைப் பருவத்திலுஞ்சரி, கற்றனைத் தோணியிலே மிதக்கும் காளைப் பருவத்திலுஞ்சரி கண்காணிப்புடனும் கட்டுப்பாட்டுடனும் அவர் வளர்க்கப்பட்டார், குருக்கள் அவர்களின் இடைவிடாத முயற்சியால், ஈடிணையற்ற தெய்வ பக்தியால், இலட்சியப் பிடிப்பால், மெல்லமெல்ல முன்னேறி இன்று மேருவென மிளிர்கின்றார்.

குருக்கள் அவர்களின் தந்தையார் சிவஸ்ரீ ந. வே கார்த்திகேயக் குருக்கள், தம்பையாக் குருக்கள் என்ற பெயரும் இவருக்குண்டு. சேர் பொன். இராமநாதனின் சமயகுருவாக விளங்கியவர் இவரே. நல்லூரிலுள்ள கைலாசநாத சுவாமி (சிவன்) கோவிலை ஸ்தாபித்த பெருமையும் கார்த்திகேயக் குருக்களுக்குண்டு. இவரின் கனிஷ்ட புத்திரரும் பேராசிரியரின் சகோதரருமான சிவஸ்ரீ இரத்தின கைலாசநாதக் குருக்கள் இக்கோவிலைத் திறம்பட நிர்வகித்து வருகின்றார். பேராசிரியரின் தாயார் முனீஸ்வரத்தைச் சேர்ந்த சுந்தராம்பாள் என்பவர்.

1921ஆம் ஆண்டு ஆவணி மாதம் 15ஆந் திகதி பிறந்த கைலாசநாதக் குருக்கள் அவர்களுக்கு நான்கு சகோதரிகளும் ஒரு சகோதரனும் இருக்கின்றனர்.

மழலை மாறாப் பச்சிளம் பருவத்திலேயே தன் மகனுக்குச் சமஸ்கிருதக் கல்வியை ஊட்டத் தொடங்கினர் கார்த்திகேயக் குருக்கள். தனது மகன் சமஸ்கிருத மொழியிற் பாண்டித்யம் பெற வேண்டும்; சாஸ்திரோக்தமான முறையிற் சமயக் கிரியைகளை ஆற்ற வேண்டும் என்ற இலட்சியமுடைய கார்த்திகேயக் குருக்கள், ஒன்பதாவது வயதில் மகனின் உபநயனத்தை நடத்தி, இந்தியாவிலிருந்து வைக்கம் சிதம்பர சாஸ்திரிகள் என்பவரை வரவழைத்து, மகனின் வேதாகமக் கல்விக்குப் பொறுப்பாக அவரை நியமித்தார். பத்து ஆண்டுகளின் பின்னர், கொல்லங்கோட்டைப் பிறப்பிடமாகக்கொண்ட சுன்னுகம் சிதம்பர சாஸ்திரிகளிடமும் 1942ல் வியாகரண சிரோமணி தி. கி. சீதாராம சாஸ்திரிகளிடமும் சமஸ்கிருதம் கற்கத் தொடங்கினர். கைலாசநாதக் குருக்களின் தமிழ்க் கல்வி, ஐந்தாவது வயதில் நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாசாலையிலும் பத்தாவது வயதில் பரமேஸ்வரக் கல்லூரியில் ஆங்கிலக் கல்வியும் ஆரம்பமாயின. குருக்கள் அவர்களுடையகல்வியின் ஆரம்பத்தைத்தான் குறிப்பீடலாமே தவிர, முடிவைக் குறிப்பிட முடியாது. ''ஒரு மொழியில்—ஒரு துறையிலுள்ள நூல்களைக் கற்றுத் தெளிவதற்கே இப்பிறவி போதாது. இந்த நிலையில், ''கற்று முடித்து விட்டேன்'' என்று யாரால் திருப்திப்பட முடியும்?'' எனக் கேட்கும் பேராசிரியர் குருக்கள் அவர்கள் தனக்குக்கிடைக்கும் ஒய்வு நேரத்தையெல்லாம் இன்றும் படிப்பிலேயே செலவிடுகின்றார்கள். 1940-ல் இலண்டன் மற்றிக்குலேஷன் சித்தி; 1942-ல்இன்டர் ஆர்ட்ஸ்சித்தி; 1947-ல் பி. ஏ.சித்தி; 1950-ல் எம். ஏ சித்தி; 1960-ல் கலாநிதிப் பட்டம் ஆகியவை இவருடைய அமைதியான ஆடம்பரமற்ற கல்விப்பயணத்தில் ஒளிவிடும் மைற்கற்களாகும். அறிவுத் தேட்டமே அவருடைய நாட்டமாக இருந்தது. அதற்குரியவழிகளிலேயே, அவருடையசிந்தனை பதிந்திருந்தது

அதனுற்றான், சமஸ்கிருத உதவி விரிவுரையாளர் பதவியை இலங்கைப் பல்கலைக் கழகம் இவருக்கு வழங்கிய போது, தற்காலிக நியமனமாக இருந்தபோதிலும் முழுமனதுடன் இவர் அதை ஏற்றுக்கொண்டார். இவருடைய கற்பிக்கும் ஆற்றலை, பண்பு நிறைந்த மாணவர்களை உருவாக்கும் பணியை, மாணவர்களுக்கு அறிவினை வாரிவழங்கிய அதேவேளையில் தன்னுடைய அறிவையும் மேலும் மேலும் விருத்தி செய்வதில் இவர் மேற்கொண்ட உழைப்பை நன்கு கவனத்திலெடுத்த பல்கலைக் கழக நிர்வாகம் 1953ல் இவருடைய நியமனத்தை நிரந்தரமாக்கியது. மிக விரைவில் இவர்விரிவுரையாளராகப் பதவி உயர்வுபெற்றார். 1974-ல் கொழும்பு வளாகத்தில் சமஸ்கிருதத்துறையின் தலைவரானுர். 1975-ல் யாழ்ப்பாண வளாகத்தில் இந்து நாகரிகத்துறையின் பேராசிரியரானுர் அதே வேளையில் பல்கலைக்கழகப் பண்பாட்டுத் துறைத் தலைவராகவும் இராமநாதன் நுண்கலைக்கழகத்தலைவராகவும் கடமையாற்றவேண்டிய நிலையும் ஏற்பட்டது. எனினும், நிர்வாக இயந்திரத்தின் சில்லுகளை இயக்குவதை விட, எம். ஏ, கலாநிதி, போன்ற பட்டங்களைப் பெறுவதற்கான ஆராய்ச்சியில் ஈடுபடும் மாணவர்களுக்குப் போதிப்பதிலும் அவர்களை வழிநடத்துவதிலுமே அவர் பூரண மகிழ்ச்சியும் திருப்தியும் அடைகின்றார். நீண்டநாள்வேண்டுகோளின் பின்னர், நிர்வாகப் பொறுப்புக்கள் சிலவற்றிலிருந்து இவர் விடுவிக்கப்பட்டது, இவருக்கு நிம்மதியை அளித்துள்ளது.

திருடர்கள், வருமானவரி அதிகாரிகள், உதவி கேட்கும் உறவினர்கள் போன்றோருக்குப் பயந்து பொருட் செல்வத்தை இலகுவில் மறைத்து வைக்கலாம். ஆனல், கொடுக்கக் கொடுக்கப் பெருகிக் கொண்டேயிருக்கும் கல்விச் செல்வத்தை எவரிடமிருந்தும் எதனலும் மறைத்து வைக்கவே முடியாது. மறைக்க முயன்றாலும் அதிக வீறுடன் வெளிக்காட்டியே தீரும், தன்னையோ. தன்கருத்துக்களையோ எவர்மீதும் வலிந்து திணிக்க முயலாமல், தன்னை எவ்வாற்றானும் பிரபலப்படுத்த விரும்பாமல், தானுண்டு தன் படிப்

(5-ம் பக்கம் பார்க்க)

### இன்று உற்சவாரம்பம்

# கருணை மழை பொழியும் கலட்டி மகாமாரி

கனக. விவேகானந்தன்

அன்னை மகாசக்தியைத் தாயாகவும் சிவத்தைத் தந்தையாகவும் கொண்டு அம்மையப்பனைக் கண்டு வழிபாடியற்றி வருவது சைவ மக்கள் மரபாகும். பராசக்தியின் வடிவங்கள் பல. அவற்றுள் ஒரு வடிவம்தான் அருள் மிகு மகாமாரி. அத்தகைய சிறப்புடைய மகாமாரித் தாய், கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள வண்ணார்பண்ணை கிழக்கு கலட்டியில் இன்று கொடியேற்றம்.

சுமார் ஒரு நூற்றாண்டுக்கு முற்பட்ட காலகட்டத்தில் அந்தக் கிராம மக்களால் அன்னையின் யந்திரம் ஒன்று பிரதிட்டை செய்யப்பட்டு பூசிக்கப்பட்டு வந்தது. சொற்ப காலத்தில் அன்னை மகாமாரி உருவம் பிரதிட்டை செய்யப்பட்டு அலங்கார உற்சவங்கள் நடாத்தி அக்கிராமத்து மக்கள் மகிழ்ந்து வந்தனர்.

ஏறத்தாள அரை நூற்றாண்டு காலம் இந்த அலங்கார உற்சவங்கள் நிகழ்ந்து வந்தன. பின்பு அம்பிகையின் அடியார்கள் அன்னையின் திருத்தலத்தைப் புனர்நிர்மாணம் செய்ய விழைந்தனர். அவர்களின் விருப்பங்கள் நிறைவுபெற அன்னை மகாமாரி திருவுளம் கொண்டாள். புனர் நிர்மாண வேலைகள் யாவும் பூர்த்தி செய்யப்பட்டு 1929ம் ஆண்டு அன்னைக்கு மகாகும்பாபிஷேகம் இயற்றி மகிழ்ந்தனர். மகாகும்பாபிஷேகத்தினை நடாத்தி மகிழ்ந்ததோடு நின்றுவிடாமல், அலங்கார உற்சவங்களை மகோற்சவங்களாக மாற்றி அம்பிகைக்கு விழா எடுத்துமகிழ்ந்தனர். அன்றிலிரு

[8-ம் பக்கம் பார்க்க]

## யாழ். இந்து ஆரம்ப பாடசாலை இல்லப்போட்டி:

# "பாடசாலையின் துரித முன்னேற்றம் பாராட்டத்தக்கது"

[யாழ்ப்பாணம்]

அன்று ஒரு சிறிய பாட சாலையாகவிருந்த யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை இன்று ஆயிரம் மாணவர்களைக் கொண்டு, இலங்கையிலேயே ஒரு முதலாந்தரப் பாடசாலையாக இருப்பது கண்டு நான் பெருமைப்படுகின்றேன். அதிலு, இப்பாடசாலையில்தான் நான் எனது ஆரம்பக் கல்வியைப்பயின்றேன் என்று கூறும் போது. இரட்டிப்பானமகிழ்ச்சி ஏற்படுகிறது. யாழ். இந்து ஆரம்பப்பாடசாலை துரித வேகத்தில் முன்னேற்றம்பெற் றிருக்கிறது. கல்வியிலும் விளையாட்டுத்துறையிலும் மாணவர்கள் இன்று முன்நிற்பதற்குப் பாடசாலை அதிபரின் ஊக்கமும் திறமையும் ஒரு காரணமாகும். இப்பாடசாலை எதிர்காலத்தில் மேலும் முன்னேற்றம் காணும் என்று எதிர் பார்க்கின்றேன்.'

இவ்வாறு யாழ். இந்து ஆரம்பப்பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட, யாழ். மாவட்ட அபிவிருத்தி சபை உபதலைவர் திரு. சி.நாகராசா கூறினார்.

யாழ் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இல்ல விளையாட்டுப்போட்டிகளுக்கு பாடசாலை அதிபர் திரு. செ. கனகரத்தினம் தலைமை வகித்தார்.

நல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. சு. சிவநாயகமூர்த்தி தமதுரையில்; விளையாட்டுப் போட்டிகளில் கூடுதலான பிள்ளைகள் பங்குபற்றியது சிறப்பான ஏற்பாடு என்றும், கூட்டு நிகழ்ச்சிகள் அதிகமாக இங்கு காணப்படுவது மிகவும் வரவேற்கக்கூடிய அம்சம் என்றும், அதிபரின் இச் சிறந்தஏற்பாடுகள்பாராட்டத் தக்கதென்றும் குறிப்பிட்டார்.

### சபாபதி முதலிடம்

இல்ல விளையாட்டுப் போட்டிகளில் சபாபதி இல்லம் முதலிடத்தைப்பெற்றது. நாவலிங்கம், பசுபதி, காசிப்பிள்ளை இல்லங்கள் முறையே 2,3, 4ம் இடங்களைப்பெற்றன.

### கூடுதல் புள்ளி பெற்றவர்கள்

இல்ல விளையாட்டுப்போட்டிகளில் கூடுதல் புள்ளிகள் பெற்றவர்களில் ஐந்தாம் வகுப்பில் ஆண்கள் பிரிவில் மா. சங்கர், பெண்கள் பிரிவில் ம. கீதாஞ்சலி ஆகியோர் முதலிடம் பெற்றனர். நான்காம் வகுப்பு [ஆண்கள்] ச. வரதன், [பெண்கள்] அ. கவிதா, மூன்றும் வகுப்பு [ஆண்கள்] சி. பிரபாகரன். (பெண்கள்) நா. மதுராங்கனி ஆகியோர் கூடுதல் புள்ளிகள் பெற்றிருந்தனர். வெற்றிபெற்றவர்களுக்கு திருமதி இ நாகராசா பரிசுகளை வழங்கினர்.

# "நோக்கங்களை மறைக்க வேடம் போடுகிறார்கள்"

## பொன். குமாரசாமி கூறுகிறார்

(யாழ்ப்பாணம்)

சமீபத்தில் ஜனாதிபதிவானொலியில் ஆற்றிய உரையில் இலங்கை கம்யூ. கட்சியை மிக கடுமையாகச் சாடியுள்ளார். மறு புறத்தில் திரு. அமிர்தலிங்கம் தமிழர்களின் ஐக்கியம் சிதைந்து போவதற்கு இடதுசாரிகளே காரணம் என்று இலங்கை கம்யூ. கட்சி மீது குற்றம் சாட்டியுள்ளார். இவ் இரு தரப்பினரும் ஒரே ஒரே கண்ஓட்டத்தில் கம்யூ. கட்சியை நோக்குவது ஒரு பெரும் உண்மையை வெளிப்படுத்துகின்றது. தமது முதலாளித்துவ நோக்கினையும் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளுடன் இவர்கள் கொண்டாடுவதையும் மக்களிடமிருந்தும் மறைப்பதற்காகவும் ஜனநாயக சோஷலிசம் என்றும் விஞ்ஞான சோஷலிசம் என்றும் வேடம்போடுகின்றார்கள்.

இவ்வாறு யாழ்ப்பாணம் கலட்டி கலைவாணி சனசமூக நிலைய முன்றலில் நடைபெற்ற கருத்தரங் கொன்றில் இலங்கைக் கம்யூ: கட்சியின் யாழ். மாவட்டக் குழுச் செயலாளர் திரு. பொன். குமாரசுவாமி உரையாற்றுகையில் கூறினார். இக்கூட்டத்திற்கு திரு. செ. வீரசிங்கம் தலைமை வகித்தார்.

அவர் மேலும் பேசுகையில் கம்யூ. கட்சி ஒரு சிறியகட்சி தானே எப்பொழுது பதவிக்கு வரப்போகிறது, அதுவரையில் தமிழ்மக்கள் தமது பிரச்சனைகளுக்கு தீர்வுகாணாது பொறுத்திருக்க முடியுமா என்றெல்லாம் சிலர் கேள்விகள் எழுப்புகிறார்கள் 1962ம் ஆண்டில் உருவாகிய இடதுசாரி ஐக்கிய முன்னணி தொடர்ந்தும் செயல்பட்டு இருப்பின் இன்று இலங்கையில் தொழிலாளிவர்க்கத்தினதும், ஒடுக்கப்பட்ட மக்களினதும் தலைமையிலான ஓர் உண்மையான சோஷலிச ஆட்சிநிலை கொண்டிருக்கு மென்பதையாரும் ஆட்சேபிக்கமுடியாது. அக்கால கட்டத்தில் கம்யூ கட்சியின் அங்கத்துவம் இன்று இருப்பதை விட அரைவாசியிலும் குறைவாகவே இருந்தது என்பதை இக்கேள்வி கிளப்புகிறவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

இன்று சூறுவளியாக அரசியல் மாற்றங்கள் நடைபெறுவதை நாம் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. எனவே கம்யூ கட்சி எப்பொழுது பதவிக்கு வரும் என எண்ணுவதைவிட்டு அக்கட்சியச் சேர்ந்து அதனை வலுப்படுத்தி எந்நேரத்திலும் புரட்சிக்கான சூழ்நிலை உருவாகலாம் என்று எதிர்பார்த்து தமிழ்மக்கள் செயல்பட முன்வரவேண்டும் என்றார்.

## கைதடி

# ஆயுள்வேத ஆஸ்பத்திரி இன்று சிரமதானமூலம் சுத்திகரிப்பு

[யாழ்ப்பாணம்]

கைதடி ஆயுள்வேத ஆஸ்பத்திரி அமைந்துள்ள பகுதியைச் சுத்திகரிப்பதற்கான சிரமதானப்பணியொன்று இன்று நடைபெறவிருக்கின்றது. அறவழிப் போராட்டக் குழுவின் ஆதரவில் ஆயுள்வேத ஆஸ்பத்திரிவைத்தியஅத்தியட்சகர் டாக்டர் ஜி. பி. ஜி. பியதாச தலைமையில் நடைபெறும் இச் சிரமதானப் பணியில் 30 பேர் கலந்துகொள்வார்கள்.

மேற்படி வைத்தியசாலையில் சிகிச்சைபெறும் நோயாளிகளின் உபயோகத்திற்க டாக்டர் காசிநாதன் நூல்நிலையம் ஒன்றை அங்கு திறந்துவைக்கிறார்.

## விழுமிய கல்விமான்



யான் அறிந்த கல்விமான்களில் செல்வத்துரை அவர்களும் விழுமிய கல்விமான்களில் ஒருவராவர்.

அவர் நவாலியூர் அட்டகிரிச் சூழலிற் பிறந்து மானியம்பதி இந்துக்கல்லூரியில் சிறந்த ஆசிரியர்களிடம் பயின்று (சுவாமி விபுலானந்த அடிகள், வித்துவான் கந்தையா) மேலாகிய மெய்யறிவைப் பெற்றவராவர்.

மலேசியா சென்று புகையிரதப் பகுதியில் உத்தியோகம் வகித்து உழைப்பால் உயர்ந்து புகையிரதப் பகுதி பிராந்திய அத்தியட்சராயும் விளங்கினார்.

மலேசியாவில் இருக்கும் காலங்களில் மகாத்மா காந்தி, மாளவியாஜி, சி.வி.இராமன், இராஜகோபாலாச்சாரியார் முதலிய அறிஞர்களின் இலட்சியங்களிலும் நம்பிக்கை கொண்டு 'பிரபுத்தபாரதா'' ஏட்டில் மிளிரும் அறிவியற் பகுதிகளையும் நன்குஆராய்ந்து தெளிந்தார்.

மலேசியாவில் இருந்துவந்து, தமிழ் இலக்கியங்கள்சமயநூல்கள் பலவற்றை இனிது ஆராய்ந்து கற்றுத் தேர்த்தார்.

வள்ளுவப் பெருந்தகையின் 'வையத்துள் வாழ்வாங்கு வாழும்' நெறியை மேற்கொண்டு சுற்றத்தார், அயலார், சமூகத்தார், பிள்ளைகட்கு வழிகாட்டியாக அமைந்து இறைவன் திருவடிநிழலைப் பெற்றார் மரணாவஸ்தையைப் புறங்கண்டார். அவர்களது இழப்பு எமக்கு ஓர் மலையைத் தந்ததாயினும் உலக இயல்பு அஃதேயாதலின் தேறுதல் பெற்றோம்.

புத்தபகவானும் அவரது போதனைகள் எனும் அருள் நூலொன்றைக் கைப்பற்றிய வண்ணம் அதன் உண்மைகளில் மெய்யுணர்வை வைத்து சார்மனை நாற்காலியில் சார்ந்த வண்ணம் இறைவன் திருவடி நிழலைப்பெற்றார்,

மூ. சதாசிவம்
(இளைப்பாறிய அதிபர்)

## அமெரிக்கப் பத்திரிகையாளர் இலங்கை விஜயம்

[கொழும்பு]

அமெரிக்காவைச் சேர்ந்த பிரபல பத்திரிகையாளரும், பத்திரிகைத்துறைப் போதனாசிரியருமான பேராசிரியர் ஜோன் ஹொஹென்பேர்க் இலங்கை வந்துள்ளார். இம் மாதம் 14ம் திகதி வரை இங்கு தங்கவிருக்கும் பேராசிரியர் ஜோன், பத்திரிகைத்துறையைச் சார்ந்த விரிவுரைகளையும் கருத்துக்களையும் தலைநகரின் பல்வேறு கல்வி நிறுவனங்களிலும் நடத்தவுள்ளார்.

அமெரிக்காவின் பிரபல பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் நிருபராகவும், ஆசிரியராகவும் கடமையாற்றிய இவர், அமெரிக்கப் பல்கலைக் கழகங்கள் சிலவற்றில் பத்திரிகைத்துறைப் பேராசிரியராகவும் இருந்துள்ளார். பதினொரு புத்தகங்களையும் இவர் எழுதியுள்ளார்.

# இந்துப்பண்பாட்டின்....

[4ம் பக்கத் தொடர்ச்சி]

புண்டு எனத் தன் நூல்களுக்குள்ளே மூழ்கியிருந்த கைலாசநாதக்குருக்களின் வித்துவச் சிறப்பு, காஞ்சிப் பெரியவர்—காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரநந்திர சரஸ்வதி ஸ்வாமிகளின் காதுக்களுக்கெட்டியது குருக்களைத் தன்னிடம் அழைத்து, அவருடன் உரையாடி, அவருடைய கூர்ந்த மதியையும் தேர்ந்த ஞானத்தையும் பூரணமாய் உணர்ந்து காஞ்சிக்கு அண்மையிலுள்ள கைவாஸ்தானம் என்ற தலத்திலே குருக்களுக்குப் பொன்னாடைபோர்த்திப் பாராட்டிக் கௌரவித்தார் இலங்கையிலுள்ளவேறுஎவருக்கும் அளிக்கப்படாத இந்தக் கௌரவத்தை நினைந்து இந்துக்கள் அனைவருமே பெருமைப்படலாம். 1975ஆம் ஆண்டிலே காஞ்சிப் பெரியவரின் தலைமையில் சென்னையில் நடைபெற்ற உலக இந்து மகாநாட்டிலே பெரியவரின் அருளாணைக்கிணங்கக் கலந்து கொண்ட பேராசிரியர் இலங்கைக் கிளையின் செயலாளராக ஏகமனதாகத் தெரிவுசெய்யப் பட்டார். 1977-ம் ஆண்டில் மலேஷியாவில் நடைபெற்ற உலக இந்து மகாநாட்டின் கிளைக்கூட்டத்திற் கலந்து கொண்டதும், மலேஷியாவின் பல்வேறு பிரதேசங்களிற் சமயச் சொற்பொழிவுகள் ஆற்றியதும், மலேஷியப் பல்கலைக்கழகப் பேராசிரியர் டாக்டர் கோ. சுந்தரமூர்த்தி தலைமையிற் பாராட்டுவிழா நடைபெற்றதும் கைலாசநாதக் குருக்களின் நினைவில் உண்டு.

### ஆசிரியர்களின் பாராட்டு

தன்னை முற்றாகத் தெரிந்து கொண்ட—முழுதாக உணர்ந்து கொண்ட தன் ஆசிரியர்களின் மனப்பூர்வமான பாராட்டுக்கள் தன்வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு வழி வகுத்து, பிறநாடுகளிற்கௌரவமும் பாரட்டும் பெறுவதற்குக் காலாக அமைந்தன என்ற நன்றியில் திளைக்கின்றார் குருக்கள்.

''கைலாஸநாதன் என் சிஷ்யன் என்ற நினைவு எனக்குப்பெரும் மகிழ்ச்சியையும் திருப்தியையுந் தருகின்றது.'' என்கின்றார் வியாகரண சிரோமணி தி. கி. சீதாராம சாஸ்திரிகள் இலங்கைப் பல்கலைக் கழகத்திற் சமஸ்கிருதப் பேராசிரியையாகக் கடமையாற்றிய ஜேர்மனியப் பெண்மணி பெட்டி ஹைமன் குருக்கள் அவர்களின் சமஸ்கிருத உச்சரிப்பையும் கிரகிக்கும் ஆற்றலையும் வியந்து, அவரைப்பின்பற்றுமாறு ஏனைய மாணவர்களுக்கு ஆலோசனை வழங்குவதுண்டு. ''இந்தியாவிலுள்ள சமஷ்கிருத அறிஞர்களுக்கு இணையான – இலங்கையின் மிகச்சிறந்த சமஸ்கிருத அறிஞர் கைலாஸநாதக்குருக்கள்'' என்பார் பேராசிரியர் என். ஏ, டி. எஸ். விஜயசேகரா அவர்கள்.

அறிஞராக மட்டுமல்லாமற் சிறந்த சாதகராகவும் விளங்குபவர் பேராசிரியர் கைலாஸநாதக் குருக்கள்,

இந்து மதத்திற்குரிய பழக்க வழக்கங்களை, சம்பிரதாயங்களை இயன்றவரை கைக் கொண்டு ஒழுகுபவர்.

### சாமவேளையில் துயில் நீங்கி

நாயும் பேயும் உறங்குகின்ற நள்ளிரவையடுத்த சாமவேளையிற் துயில்நீங்கி எழுந்து, தோய்ந்து ஆசாரசீலராய் அம்பாளுக்குப் பூஜை செய்து ஸஹஸ்ர நாம பாராயணம் செயவது அவருடைய தினசரிக் கடமைகளுள் முதலிடம் வகிப்பது. முன்னர் பேராதனைப்பல்கலைக்கழகத்திற் பணி புரிந்த போதுஞ்சரி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற் பணி புரிகின்ற இப்போதுஞ்சரி இந்த கைங்கர்யத்தை அவர் தொடர்ந்து செய்து வருகின்றார்.

### கோயில் கிரியைகள்

''சைவத்திருக்கோயிற் 'கிரியை நெறி' என்ற அருமையான நூலை எழுதிய பேராசிரியர் கைலாஸநாதக் குருக்கள் கோவிற்கிரியைகளைச் சரியாகச் செய்வதில் நிகரற்றவர். பிரதான சிவாச்சாரியாராகக் குருக்கள் அவர்கள் கடமையாற்றும் வேளைகளில் சாஸ்திரரீதியாக, சின்னஞ்சிறு விஷயங்களிலும் பூரணமான கவனம் செலுத்தி பக்தியுணர்வு கிளர்ந்தெழச் செய்யும் வகையில் அவர் செய்யும் கிரியைகளை நேரிற் பார்த்துப் பயன் பெறுவதற்கும் புதிய விஷயங்களை அறிந்து கொள்வதற்குமாகச் சிவாசாரியார்கள் பலர் கிரியைகள் நடைபெறும் கோவில்களுக்குச் செல்வதுண்டு. வரலாற்றுப்புகழ்மிக்க சிலாபம் முனீஸ்வரம் முன்னைநாத சுவாமி கோவில் 1964ஆம் ஆண்டில் பேராசிரியர் அவர்கள் பிரதான சிவாச்சார்யராக இருந்து நடத்தி வைத்த மஹா கும்பாபிஷேகத்தின் சிறப்பை இன்றும் பலர் குறிப்பிட்டுச் சொல்வதுண்டு.

தனது பன்னிரண்டாம் வயதிலேயே திருகோணமலைப் பத்திரகாளி கோவிற் கும்பாபிஷேகத்திற் கலந்துகொண்டு தந்தையாருக்கு அனுசரணையாகப் பத்ததி வாசித்தும்வேத பாராயணம் செய்தும் திருகோணமலை மக்களின் அன்புக்கும் பாராட்டுக்கும் பெரிதும் பாத்திரமான கைலாஸநாதக் குருக்களுக்கு—

புராண இதிகாசகாலத்துச் சைவசமயம் பற்றியும், தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் காணப்படும் சமய வழக்கங்கள் கிரியைகள் பற்றியும் பூனாப் பல்கலைக்கழகத்திற் பேராசிரியர் தண்டேகர் தலைமையில் ஆராய்ந்து கலாநிதிப் பட்டம் பெற்ற கைலாயநாதக் குருக்களுக்கு—

கோவிற்கிரியைகளைச்செய்வதென்பது ஆகிவந்த அருட்கலை; ஆத்ம திருப்தி அளிக்கும் அருங்கலை. ஆத்ம திருப்தியும் லோக க்ஷேமமுமே அவருடைய இலட்சியம்.

பேராசிரியரைப்பற்றிய குறிப்பில் அவருக்கு வாய்த்த மங்கை நல்லாளைப் பற்றிக்கூறுவிட்டால் அது நிறைவாகாது. திருவள்ளுவர் உபயோகிக்கும் வாழ்க்கைத் துணை நலம்'' என்ற சொல்லுக்கு முற்றிலும் பொருத்தமானவர் பேராசிரியரின் தர்மபத்தினியான திரிபுர சுந்தரி அம்மாள். பேராசிரியர் எடுக்கும் காரியம்யாவினும் கைகொடுத்து அவருடைய பணிகள் சிறக்க உறு துணைபுரிபவர் அவர். ''ஆஸ்திக்கு ஒரு ஆணும் ஆசைக்கொரு பெண்''ணுமாக இரண்டு மக்கட் செல்வங்களுடன் அவர் இல்லறத்தை நல்லறமாக்கி வருகின்றார்.

''அந்தணர் என்பர்
அறவோர்
மற்றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை
பூண்டொழுகலான்''
என்பார் திருவள்ளுவர்.

பரம்பரையால் மட்டுமல்லாமல், பண்பாலும், பக்தியாலும், பழக்கவழக்கத்தாலும், பணிவாலும் பயன்தரு பணியாலும் அந்தணராக விளங்கும் பேராசிரியர் கைலாஸநாதக் குருக்கள் ''எளிமையான வாழ்க்கை, ஏற்றந்தரும் சிந்தனை'' என்பதற்கு இலக்கியமாகவும் மிளிர்கின்றார்.

## கல்லூரி தினவிழா

[இளவாலை]

இளவாலை புனித என்றியரசர் கல்லூரி தினவிழா இன்று சனிக்கிழமை கொண்டாடப் படவிருக்கின்றது. பலிப்பூசையின் பின் கலாசாலைக் கொடியேற்றத்துடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகிமாலை 6 மணிக்கு கலைநிகழ்ச்சிகளுடன்முடிவடையும்.

# "சாதிக்கொடுமைகளின் அவலங்களை உணர்த்தும் நாவல்"

## பஞ்சமர் நூல்வெளியீட்டு விழாவில் பேச்சு

யாழ்ப்பாணம்)

"நான் ஒரு வாசகன் என்ற அடிப்படையில் 'பஞ்சமர்' நாவலைப் படித்தபோது ஏற்பட்ட திருப்தியை இதுவரை நான் படித்த எந்தத் தமிழ், ஆங்கில நாவல்களும் எனக்குத் தரவில்லை. எனது தந்தை பெயர் செல்லப்பா. எங்க வீட்டுச் சலவைத் தொழிலாளியின் பெயர் செல்லப்பன். பஞ்சமர் நாவலில் வரும் சலவைத் தொழிலாளியின் பெயரும் செல்லப்பன். பெயர்களுக்கு ஊடேயும் சாதி ஊடுருவல் எவ்வளவு தாக்கமாக இடம் பெற்றுள்ளதென் பதையும், சாதிக் கொடுமைகளினால் ஏற்பட்டுக்கொண்டிருக்கும் அவலங்களையும் 'பஞ்சமர்' நாவலைப் படித்த பின்தான் என்னால் தெளிவாக உணரமுடிந்தது. ஒவ்வொரு சமூகத்தினரிடையேயும் உள்ள பேச்சு வழக்கு முறையையும், அவர்களது வாழ்க்கைச் சூழல்களையும் சித்தரிப்பதில் இந்நாவல் சிறப்புப் பெறுகிறது. இன்னும் பல்லாண்டுகளுக்குப் பின்பும் இந்நாவலைப் படிப்பவர்கள் எம் பிரதேச சமூக வரலாற்றினைக் கண்டு திகைப்படைவர்."

இவ்வாறு சட்டத்தரணி செ. அம்பிகைபாலன் கடந்த சனி மாலை யாழ். றிம்மர் மண்டபத்தில் நடைபெற்ற எழுத்தாளர் கே. டானியலின் 'பஞ்சமர்' நாவல் (இருபாகங்களும் அடங்கியது) வெளியீட்டுவிழாவில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

உதவி அரசாங்க அதிபர் திரு. சி.பற்குணம் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:-

'பஞ்சமர்' நாவல் முழு முழுக்க எம்பிரதேசத்தில் அன்றுதொட்டு இன்றுவரை நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் கொடுமைகளை அப்படியே வெளிக்கொண்டுவந்துள்ளது. இந்தக் கொடுமைகளுக்குட்பட்டு தியாகங்கள் பல புரிந்தவர்களை நாவலில் நாம் தரிசிப்பதோடு மட்டுமல்லாது இந்த வெளியீட்டு விழாவிலும் நினைவுகூரவேண்டும்."

இவ்வெளியீட்டுவிழாவுக்குத் தலைமை வகித்த ஆசிரியர் கே. கிருஷ்ணபிள்ளை தலைமையுரையில் குறிப்பிட்டதாவது:-

"குறிப்பிட்ட ஒருசிலருக்குப் புகழைத் தேடிக் கொடுப்பதற்காக இந்நாவல் எழுதப்படவில்லை. தமிழ்ப் பிரதேசத்தில் ஒடுக்கப்பட்டுள்ள இலட்சக்கணக்கான மக்களுக்காகவும், அவர்களோடொத்த பிரச்சினைகளையுடைய ஏனைய மக்களுக்காகவுமே இந்நாவல் எழுதப்பட்டதாகும். இந்த மக்கள் தமது மனித உரிமையை நிலைநாட்ட எடுத்த போராட்டங்களையே இந்நாவல் உள்ளடக்கியுள்ளது. இந்தப் போராட்ட வரலாற்றினை நிரைப்படுத்தி இலக்கிய உருவங்கொடுத்த ஒரு பணியையே நூலாசிரியர் செய்துள்ளார். எனவே இந்த மக்களே இந்நாவலின் எஜமானர்கள் ஆவர். இதனால் 'புரட்சிகர இலக்கியங்கள் புரட்சிகர நடைமுறையில் இருந்தே பிறக்கின்றன' என்ற தத்துவமும் உறுதிப்படுத்தப்படுகிறது.

யாழ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கலாநிதி அ. சண்முகதாஸ், கலாநிதி வே. இராமகிருஷ்ணன், எழுத்தாளர்கள் வி. ரி. இளங்கோவன், பாஷையூர் தேவதாசன், திரு. எஸ். இராசா ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

நூலின் முதற்பிரதியினை கலாநிதி அ. சண்முகதாஸிடம் இருந்து சட்டத்தரணி திருமதி லிங்கா துரைராசா பெற்றுக் கொண்டார்.

## ஹாட்லி-பரியோவான் கிரிக்கெட்

(அரியாலை

பருத்தித்துறை ஹாட்லிக்கும், யாழ் பரியோவான் கல்லூரிக்குமிடையேநடைபெற்ற 17 வயதுக்குட்பட்டவர்களுக்கான கிரிக்கெட் போட்டியில் முதலாவது ஆட்டத்தின்மூலம் பரியோவான் கல்லூரிக் கோஷ்டி வெற்றியீட்டியது.

முதலாவது முறையாகத் துடுப்பெடுத்தாடிய பரியோவான் கல்லூரிக்கோஷ்டி எல்லா விக்கட்டுகளையும் இழந்து 211 ஓட்டங்களைப்பெற்றது. இக்கோஷ்டியைச்சேர்ந்த எஸ். சந்திரகுமார். ரி. எஸ். பாட்லட், பி. திருக்குமார், கே. சந்திரசேகர் ஆகியோர் முறையே 59, 42, 26, 21 ஓட்டங்களைப் பெற்றனர். இவகளை எதிர்த்துப் பந்து வீசிய கதிர்ச் செல்வம் 54 ஓட்டங்களுக்கு 4 விக்கட்டுகளையும், ஜெயநாதன் 54 ஓட்டங்களுக்கு 3 விக்கட்டுக்களையும் கைப்பற்றினர்.

ஹாட்லிக்கல்லூரி தனது முதலாவது ஆட்டத்தில் எல்லா விக்கட்டுகளையும் இழந்து 158 ஓட்டங்களைப் பெற்றது இக்கோஷ்டியைச் சேர்ந்த நேசகுமார், பி ஏ. றிச்சேட், சாந்தாராம், கதிர்ச்செல்வம் ஆகியோர் 31, 28, 22, 20 ஓட்டங்களையும், ஜெயந்தன் வெளியேறுமலே 41 ஓட்டங்களையும் பெற்றனர். இவர்களை எதிர்த்துப் பந்து வீசிய எஸ். எஸ். ஆனல்ட் 43 ஓட்டங்களுக்கு 5 விக்கட்டுகளையும், கதிர்காமநாதன் 17ஓட்டங்களுக்கு 2 விக்கட்டுகளையும் பெற்றனர்.

இதனைத் தொடர்ந்து பரி. யோவான் கல்லூரி தனது இரண்டாவது ஆட்டத்தில் நேரம் முடியும்வரை எதுவித விக்கட்டுகளையும் இழக்காது 92 ஓட்டங்களைப் பெற்றது. இக்காஷ்டியைச்சேர்ந்த நிஜ்யாந்தன், கதிர்காமநாதன் வெளியேறுமலேயே 57,35 ஓட்டங்களைப்பெற்றனர்.

## நாளை.

(சங்கானை)

சங்கானை இந்து இளைஞர் மன்றக் கட்டடத் திறப்புவிழாவும், ஆண்டு விழாவும் இல்லை விளையாட்டுப் போட்டியும் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை சிலம்புப்புட்டளியடி வைரவர் ஆலய வீதியில் வட்டுக்கோட்டை எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெறவுள்ளது.


T. V. ஏரியல் அமைப்பில்

முதன்மைமிக்க ஸ்தாபனம்

சென்னை, ரூபவாகினி நிகழ்ச்சிகளை

T V யில் சிரமமின்றி பார்க்க

உத்தரவாதத்துடன் ஏரியல் அமைத்துத் தருவோம்.

நொடிப்பொழுதில், TV ஏரியல்

கோளாறுகள் சரி செய்யலாம்.

எமது பராமரிப்பு சேவை

24 மணி நேரமும் செயல்படுகின்றது

சுபநிகழ்ச்சிகளை வீடியோ படக்காட்சியில்

எடுப்பதற்கு

குறைந்த கட்டணம்

பல்வேறு TV செட்டுகளை

பினான்ஸ் வசதியுடன் பெறலாம்.

வீனஸ்

றெக்கோடிங்

றேடியோ வாச் வேக்ஸ்

ஸ்ரீதர் தியேட்டர் முன்,

யாழ்ப்பாணம்.




சதங்கை நர்த்தனாலய அதிபர் திருமதி லீலா ஆறுமுகையாவின் மாணவியான செல்வி ரச்சீலியா ஆஞ்சீலியா அலோசியஸின் பரதநாட்டிய அரங்கேற்றம் இன்று மாலை 6 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. யாழ். பல்கலைக்கழக சமஸ்கிருத மொழித்துறைத் தலைவர் திரு. வி. சிவசாமி தலைமையில் இவ்வரங்கேற்றம் நடைபெறவுள்ளது.

# கைதிமரணம்: பகிரங்கதீர்ப்பு: சிறை அதிகாரிகள் மூவர் பிணையில்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சிறைச்சாலையிலிருந்து ஏனைய மூன்று கைதிகளுடன் தப்பி ஓடிய அரியாலையில் பொது மக்களால் பிடித்து ஒப்படைக்கப்பட்டுமரணமான பரமு குருகுலசிங்கம் என்ற இளைஞரின் மரண விசாரணையில் கொலையென பகிரங்கத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

இம்மரணம் தொடர்பாக யாழ். சிறைச்சாலை அதிகாரிகள் மூவர் தலா ஆயிரம் ரூபா பிணையில் பிரதம ஜெயிலரின் பொறுப்பில் நேற்று யாழ். நீதவான் திரு. ரி. ஜோகநாதனால்விடுவிக்கப்பட்டனர், மற்றுமொரு சிறைச்சாலை அதிகாரி கொழும்பு சென்றிருந்தமையால் ஆஜர்செய்யப்படவில்லையென நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஏப்ரல் மாதம் [illegible] ம் திகதி சிறையிலிருந்து தப்பி ஓடிய ப. குருகுலசிங்கம் 15ம் திகதி யாழ். அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை மேற்கொண்ட சமயம் காலமடைந்திருந்தார், இச்சம்பவம் குறித்துப் பொலிசார் புலன்விசாரணை செய்தபோது மற்றுமொருகைதிய இரத்தினம் பாலசிங்கம் என்பவர் கடந்த ஏப்ரல் மாதம் 14ம் திகதியன்று பொன்னுத்துரை, ஜெயராசா, பாலசுந்தரம், மெனிசிஸ் ஆகிய நான்கு சிறைச்சாலை அதிகாரிகளும் காலஞ்சென்ற குருகுலசிங்கத்தைப் பலமுறை தாக்கியதாகக் குறிப்பிடப்பட்டிருந்தார்.

பிரேத பரிசோதனையைப் பதில் சட்டவைத்திய அதிகாரி டாக்டர் சாவணபவானந்தனும் மரணவிசாரணையை யாழ். நீதவான் திரு. ரி. யோகநாதனும் மேற்கொண்டிருந்தனர். காலஞ்சென்ற குருகுலசிங்கம் சிறைச்சாலையிலிருந்து தப்பி ஓடி அரியாலையில் பிக் பொக்கட் அடிக்க முயன்றபோது பொதுமக்களால் பிடிக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. வழக்கு விசாரணைகள் எதிர்வரும் 19ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது, (சி)

## மகாதேவா...

(3-ம் பக்கத் தொடர்ச்சி

(3-ம் பக்கத் தொடர்ச்சி

வர் திரு. இராஜாவிசுவநா உரைநிகழ்த்துகையில் இ கத்தினுள் உள்ள கருத் போதலை இயக்கத்திற்கு ளேயேடேசித் தீர்க்கவேண்டு என்றார்.

வெளிநாடுகளிலுள்ளவர்கள் தமக்குள் ஒற்றுமைப்பட்டு செயலாற்ற விரும்பும் இவ்வேளையில் இங்குள்ள வாலிபர்களும் அவ்வாறே ஒற்றுமைப்பட்டு செயலாற்ற வேண்டும். இரத்தம் சிந்தாது விடுதலை பெறமுடியாது எனினும் இயக்கத்தின் கட்டுப்பாடுகள் வழிகாட்டல்கள் என்பனவற்றின் கீழ் தாம் அத்தகைய செயல்கள் நடைபெவேண்டுமே அல்லாது, நினைத்த போக்கில் செயல்படக்கூடாது" என்றும் அவர் குறிப்பிட்டார்,

திருமதி யோகேஸ்வரன் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கினார். இதனையடுத்து கலைநிகழ்ச்சிகள் இடம்பெற்றன. (கி)

# மைத்திரி குழு 11-ல் கூடுகிறது

(கொழும்பு)

அரசியலமைப்பில் கொண்டு வரப்படவுள்ள தேர்தல் உருத்தங்கள் பற்றி ஆராய்வதற்காக சிறீலங்கா சுதந்திரக் கட்சி (மைத்திரி பிரிவு) செயற்குழு நாளை 11-ம் திகதி கூடவுள்ளது. இக்கட்சியின் பொதுச்சபை 16-ம் திகதி கூடி இதுபற்றி ஆராயும். (ம-வெ)

## நினைவு விழா

[புலோலி]

தென்புலோலி முருகையா கோவிலடி அறிவகம் சனசமூக நிலையத்தின் இருபத்தி ஏழாவது ஆண்டு நிறைவு விழாவும் விளையாட்டுப்போட்டியும் இம் மாதம் 20-ம் திகதி முருகையன் கோவிலடியில் நடைபெறவுள்ளது.

## ஆசிரியர்....

(3ம் பக்கத் தொடர்ச்சி)

அல்லும் பகலும் அனவரதமும் கல்லூரிக்கும் கல்விக்கும் இவர் ஆற்றிய சேவை அளப்பரியது அன்னாரின் ஆத்மா இறைகழல் எய்தப் பிரார்த்திப்போமாக"

இக்கூட்டத்தில் இருநிமிட மௌனஅஞ்சலியும் செலுத்தப்பட்டது.

## கன்னியர்மடம் ஆங்கிலப் பாடசாலை அபி. சங்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடம் ஆங்கிலப்பாடசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் இம் மாதம் 14ம் திகதி பிற்பகல் நடைபெறவுள்ளது. அதிபர் அருட் செல்விஅன்ரனிஜோசேப் தலைமையில் நிகழும் இக்கூட்டத்தில் புதிய உத்தியோகஸ்தர் தெரிவு இடம் பெறும். மற்றும் பாடசாலையின் அபிவிருத்திகள் பற்றியிம் ஆராயப்படும்.

**ஹரன்** யாழ். நகர்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-ஸ்ரீதேவி
**பைலட் பிரேம்நாத்**
[புதிய பிரதி]


# பரீட்சையில் ஆள்மாருட்டம்!

## இருவரும் குற்றவாளிகள்

(யாழ்ப்பாணம்
க. பொ. த. சாதாரணதரப் பரீட்சையில் ஆள் மாருட்டம் செய்ததாக பொன்னு. திருநாவுக்கரசு, அரசன் ஸ்ரீஸ்கந்தராசா ஆகிய இருவர் மீது குற்றம் சுமத்தப்பட்ட வழக்கில் இருவரும் குற்றவாளிகளாகக் காணப்பட்டனர்.

நேற்று யாழ். நீதிமன்றத்தில் நீதவான் திரு. ரி. ஜோகநாதன் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட சமயம் மேற்படி இருவரையும் குற்றவாளியாகக் கண்ட நீதவான் முதலாம் எதிரிக்கு 5வருடம் ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனை விதித்ததுடன் இரண்டாவது எதிரியான அரசன் ஸ்ரீஸ்கந்தராசா 19 வயதிற்குட்பட்ட வராதலால் 500 ரூபா பிணையில் இருவருட நன்னடத்தையில் தந்தையின் பொறுப்பில் செல்ல அனுமதித்தார். (சி)

## ஊர்காவற்படை

(சங்கானை)

வலிகாமம் மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஊர்காவற்படைக்கு ஆட்சேர்க்கும் கடமையில் உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. செந்தில் வடிவேல் தலைமையில் அவ்வப்பகுதி விசேட அலுவர்கள் கிராமசேவை அலுவலர் பகுதி ரீதியாக விண்ணப்பங்களைச் சேகரிப்பதில் ஈடுபட்டுள்ளனர்.


**வெஸ்லி** (மானிப்பாய்) தினசரி: 6-15, 9-30 சனி, ஞாயிறு2-30
கொழும்பில் 300 நாட்களாக ஓடிக்கொண்டிருக்கும் வெற்றிச்சித்திரம்
கமலஹாசன் ஸ்ரீதேவி முத்துராமன்
**குரு** (கலர்)


# "பண்டாரவன்னியன் இனம் உறுதிப்படுத்தப்படவில்லை"

## வவனியா மேலதிக அரச அதிபர் கூறுகிருர்

(கொழும்பு)
பண்டாரவன்னியன் என்று தமிழிலும் வன்னி பண்டார வன்னி என்று சிங்களத்திலும் அழைக்கப்படும் மன்னன் தமிழரா அன்றி சிங்களவரா என்பது இன்னமும் ஆராய்ச்சியாளர்களால் உறுதிப்படுத்தப்படவில்லை.

இவ்வாறு வவனியா மேலதிக அரசாங்க அதிபர் திரு ஞா. முனசிங்கா கொழும்பு தகவல் திணைக்களத்தில் நடாத்திய பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்தார்.

பண்டாரவன்னியனின் ஓவியத்தை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஓவியர் ஒருவரே வரைந்து யாழ். தொல்பொருட்காட்சிச் சாலையில் வைக்கப்பட்டுள்ளது. அந்த ஓவியத்தில் பண்டாரவன்னியனுக்கு தலைப்பாகையும் மார்புக கவசமும் வாளும் வரையப்பட்டுள்ளது. அந்த ஓவியத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்ட பண்டாரவன்னியனின் சிலையே இம்மாதம் 16ம் திகதி வவனியாவில் நிறுவப்பட இருக்கிறது.

வவனியா மாவட்ட அமைச்சின் ஆதரவில் இச்சிலை வவனியா எம். பி. திரு ரி. சிவசிதம்பரத்திஞல் திறந்துவைக்கப்பட இருக்கிறது. இச்சிலை திறப்பு விழாவையொட்டி இந்திய இலங்கைக் கலைஞர்கள் பங்கு கொள்ளும் பெருவிழாவும் நடைபெறவுள்ளது என்றும் தெரிவித்தார். (ம-இ)



## யாழ். இந்து மாணவன் ஜப்பான் செல்கிருர்

[யாழ்ப்பாணம்]
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த மாணவன் செல்வன் கணபதிப் பிள்ளை செந்தில்குமாரன் ஜப்பான் செல்கிருர். இவர் அகில இலங்கை ரீதியில் தெரிவு செய்யப்பட்ட இருவருள் ஒருவராக உலக ஜம்போரியில் பங்கு கொள்ள இம்மாத முடிவில் ஜப்பான் செலகிருர்

இவர்1977இல்சாரணியத்தில் சேர்ந்து. ஜனுதிபதிச் சின்னம் தவிர்ந்த அனைத்தையும் தனதாக்கிக் கொண்டவர். ஆங்கிலம் தமிழ் பேச்சு வன்மை, நாடகம், இசை பேன்றதுறைகளோடு சென். யோன்ஸ் முதலுதவிப் படையின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவர் இம்மாத முடிவில் பயணமாகிருர்.

# இன்றைய பலன்

ஆனி மாதம் 26-ம் திகதி
சனிக்கிழமை
(10—7—82)

மேடம்: வாழ்க்கைபுதிராகத் தோன்றும். ஆசாரக் குறைவுக்கும் இடம் உண்டு. சகோதரி ஒருவரின் பிரச்னை மனதுக்கு வேதனையைத் தரும். அமைதி விரும்பத்தக்கது.

இடபம்: தன்மான மிகுதிக்கும் தனவரவுக்கும் இடமுண்டு. குடும்பத்தில் தென்றல் வீசும். உறவினர்கள் படை எடுத்து வருவார்கள். கல்வியில் முன்னேற்றமுண்டு. நல்லநாள்.

மிதுனம்: வட்டிக்கடை வைத்திருப்பவர்களுக்கு அது மேலும் குட்டி போடும். பண விவகாரங்கள்மகிழ்ச்சியைஅளிக்கும். வெளிநாட்டுப் பயணம் விரும்பத்தக்கது.

கடகம்: மனதில் அமைதி குன்றும். எதிரிகள் எக்காளமிடுவர். மறைந்த நினைவுகள் மீண்டும் தலைதூக்கும். அமைதியே விரும்பினுல் அறிவுக்கு நலம் உண்டு.

சிங்கம்: கருத்தொருமித்த காதலர் வாழ்வில் மறக்க முடியாத நிகழ்ச்சி இடம்பெறும். எதிர்ப்புக்கள் மறைந்து எதிலும் சாதகமான சூழ்நிலை உருவாகும்.

கன்னி: நிழலுடன் போராட்டம் நடத்துவீர்கள். உங்கள் செல்வாக்கைக் குறைப்பதற்காக எதிரிகள் கண் துடைப்பு வேலைகள் நடத்துவர் கட்டுப்பாட்டுடன் நடக்கவும்.

துலாம்: கைகொடுத்து உதவுவதற்கு தந்தை முன்வருவார். காரியசித்தியுப் கிட்டும். நீண்டநாள் எதிரிகள் இன்று மீண்டும் நண்பர்களாவார்கள். திருப்தியான தினம்.

விருச்சிகம்: வியாபாரிகளுக்கு நல்ல முன்னேற்றம் உண்டு. புதிய முதலீடுகளுக்கு சிறப்பான தினம். சிலருக்கு புதுமனை கட்டும் ஆர்வம் பிறக்கலாம். ஒளிமயமான நாள்.

தனு: வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு பல வழிகளிலும் முயற்சி செய்வீர்கள். புதுமையான செய்தியொன்று கிடைக்கக்கூடும். முன்னேற்றத்துக்கு இடமுண்டு.

மகரம்: வணிகர்கள் இன்று அதிக முதலீட்டைத் தவிர்த்துக் கொள்ளவும் வீணை சிந்தனைகளால் வேதனைப்படுவீர்கள். சிலருக்கு உடல் நலமும் பாதிக்கப்படலாம்.

கும்பம்: பணவிவகாரத்தில் அதிக கவனம் செலுத்தவும். தொழில்துறையில் சில சிக்கல்கள் தோன்றக்கூடும். எந்த விடயத்திலும் பொதுவாக தடுமாற்றம் தென்படும்.

மீனம்: குடும்ப வாழ்க்கை மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்கும். உறவினர் ஒருவரின் வருகை உற்சாகத்தை அளிக்கும். எதையும் அலசி ஆராய விரும்புவீர்கள்.

சோதிடக்கலாநிதி
**திருமலை**
**கு. வேலுப்பிள்ளை**

## நல்லூர் இளைஞர் ஜெகநாதசர்மா மறைவு

நல்லூர் நிரஞ்சன அச்சக உரிமையாளர் பிரமஸ்ரீ ஜெகநாத ஐயரின் மறைவு அன்னுருடன் தொடர்பு கொண்டிருந்த அனைவரினதும் நெஞ்சத்தில் ஒரு தாக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

தமது சொந்த வாழ்வில் ஒரு பொதுவுடைமை வாதியாகத் திகழ்ந்த ஐயர், மிக்க சமயப் பற்றுடையவர். இப்பற்றின் காரணமாக 'இந்து' என்ற சஞ்சிகை ஒன்றையும் நடத்திஞர்.

இளைஞரான ஜெகநாத ஐயர் நல்லை ஸ்ரீ கமலாம்பிகை தேவி சமேத கைலாசநாத சுவாமி தேவஸ்தானத்தில் மிகவும் ஈடுபாடுடையவர்: நவராத்திரி காலங்களில் அம்பிகைக்குப் பத்து தினங்களும் சிறப்பாக ஸ்ரீ லலிதாதிரிசதி அர்ச்சனை மிக பயபக்தியுடன் செய்வார்.

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தின் ஆரம்பகால உறுப்பினருமாவர்.

பல சமய சஞ்சிகைகளிலும் பத்திரிகைகளிலும் இவரது கட்டுரைகள் பல வெளி வந்துள்ளன. அவர் ஒரு பேச்சாளருமாவர்.

அன்னரின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம வல்ல இறைவனை பிரார்த்திப்போமாக.

சி. கிருஷ்ணமூர்த்தி
அமைப்பாளர்.
அ. இ. திருமுறை மன்றம்.


**ராணி** (யாழ் நகர்) 2-வது வாரம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-சுஜாதா-ஸ்ரீதேவி
**விஸ்வரூபம்**
[ஈஸ்ட்மன் கலர்]

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
10-30, 2-30, 6-30, 9-30
சுருளிராஜன்
**காசி யாத்திரை**
12-7-82 முதல் **அவன் அவள் அது**

**ராஜா** [யாழ்ப்பாணம்] தினசரி 4காட்சிகள்
கடைசி வாரம்
✶ ரஜனிகாந் ✶சுஜாதா ✶ விஜயன் ✶ கராத்தே மணி ✶ ரதி
**அன்புக்கு நான் அடிமை**
[ஈஸ்மன் கலர்]

**மனேகரா** (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
வெற்றி முரசுகொட்டும் 3-வது மாதம்
கார்த்திக்-ராதா-தியாகராஜன் நடித்த
**அலைகள் ஓய்வதில்லை** (கலர்)

**றீகல்** [யாழ்நகர்] தினசரி; 10-30, 2-30, 6-15, 9-30
3-வது ஜனத்திரள் வாரம்
சிவாஜி, கீதா குமாரசிங்கா, ஜெயபாரதி
**மோகனப் புன்னகை**
(கலர்)

**Windsor** (Jaffna) Last Few Days
Daily 10-30, 2-00, 4-30, 7-00 and 9-30 P. M.
BRUCE LEE in
**THE GAME OF DEATH**
(Color)
உலக சாம்பியன் புருஸ்லியின் பயங்கரமான கராட்டி சண்டைகள் நிறைந்த படம்

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
கடைசி வாரம்
**லொறி ட்ரைவர் ராஜாக்கண்ணு**

**லிடோ** (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன்
**ராஜபார்வை**

**சாந்தி** (யாழ்நகர்) 10-30, 2-30, 6-30, 9-45
இப்பொழுது ரசிகர்கள் மத்தியில் மிகுந்த பரபரப்பூட்டி

**51-வது வெற்றித் தினமாக காட்சியளிக்கிறது**
வெற்றிப்படம் 'குரு' தயாரிப்பாளர்களின் மற்றுமோர் சாதனை! சிவாஜி, எம். ஜி. ஆர். நடிப்புகளை நினைவுபடுத்தும் கமலின் நடிப்பு!
கமலஹாசன் (இரட்டை வேடம்)
சுஜாதா, சுமன், அம்பிகா, தங்கவேலு.
—கலர்—
**கடல்மீன்கள்**

## பல்கலைக்கழக அனுமதி: புதிய கல்வி ஆண்டில் 200 மாணவர்கள் அதிகம்

[கொழும்பு]

இலங்கைப் பல்கலைக்கழகங்களில் அடுத்த கல்வி ஆண்டில் 5,245 மாணவர்கள் அனுமதிக்சப்படுவர்.

இத்தகவலை உயர்கல்வி அமைச்சின் செயலாளர் டாக்டர் ஸ்டான்லி கல்பகே தெரிவித்தார்.

கடந்த ஆண்டைவிடப்புதிய ஆண்டில் 200 பேர் அதிகமாக பல்கலைக்கழகங்களில் அனுமதிக்கப்படுகின்றனர் ப அனுமதி பெறுபவர்களில் மலேஷியா, இந்தியா, பாகிஸ்தான், உகண்டா, நேபாளம், பர்மா ஆகிய நாடுகளைச் சேர்ந்த 23 மாணவர்களும் அடங்குவர்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் ஆகக்கூடுதலாக 1,420 மாணவர்களும் மட்டக்சளப்பு பல்கலைக்கழக வளாகத்தில் 75 பேரும் அனுமதிக்கப்படுவர். (இ)

## இப்படியும் நடக்கிறது

தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத் துக்குமிடையே நடைபெறும் கப்பல் சேவையில், முன்னர் வெள்ளைப்பூடும், கோப்பிக்கொட்டையும், பருப்பும் பயறு வகைகளும் மூடை மூடையாக தலைமன்னார் வந்து சேரும். பிளாஸ்ரிக் பொருள்கள் 'மலை'களாக குவியும்.

இப்பொழுது நிலைமை மாறிவிட்டது. தலைமன்னாரிலிருந்துதான் 'மூடை மூடை'களாக இராமேஸ்வரம் போய்க் குவிகிறது!

'மூடை'களை இந்திய வம்சா வழியினர்தான் கொண்டு போவதாக நீங்கள் கணக்குப் போட்டால்: அது தப்பு!

கொழும்பு வந்து குவியும் இந்திய உல்லாசப் பிரயாணிகள் தான் இம் 'மூடை'களை காவிச்செல்கின்றனர். மூடைகளில் இருப்பது –

டியூற்றி (ப்)பிறி ஷொப் சாமான்கள்!

'ஊடுரு '

## கருணை...-

[4-ம் பக்கத் தொடர்ச்சி)

ந்து இன்றுவரை அன்னையின் மகோற்சவங்கள் வெகு சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இருந்தாலும் அன்னைக்கு ஒரு அழகிய சித்திரத்தேர் இல்லையென்று அம்பிகையின் அடியார்கள் மனம் வருந்தினர். சந்திப்பவர்க்கு எளிதான தாயாக விளங்கும் அன்னை மகாமாரி, அடியார்களின் மனவருத்தத்தைப் போக்கத் திருவுளம் கொண்டாள். சித்திரத்தேர்த் திருப்பணி சிறப்பாக நடைபெற்றது. இப்பகுதிப் பெரியார்கள், இளைஞர்கள் எல்லாவற்றுக்கும் மேலாக அன்னை கிருபாகடாட்சம் யாவும் ஒருங்கே அமையப்பெற்ற மொத்த வடிவமாக 1973ல் அழகிய சித்திரத்தேர் உருப்பெற்றது. அடியார்களின் அன்புப் பணியினால் உருப்பெற்ற அழகுத் தேரில் அம்பிகை ஆரோகணம் செய்தது கண்டு அடியார் கூட்டம் அகமகிழ்ந்தது. இளைஞர்கள் ஒரு வெளியலங்காரத் திருவிழாவினையும் வைரவப் பெருமானுக்கு நடாத்தி மகிழ்ந்தனர் அவர்களின் விழா சிறப்பாக வருடா வருடம் நடைபெற்று வருகின்றது.

திருப்பணிகள் பல புரிந்தாலும், அடியார்களுக்குத் திருப்தி ஏற்படவில்லை. தொடர்ந்து அம்பாளின் திருக்கோயில் உள்மண்டபச் சுற்றுக்குக் கொட்டகை போட்டு வர்ணம் பூசி மகிழ்ந்தனர். அத்துடன் அன்னையின் மைந்தர்களாகிய பிள்ளையார், சுப்பிரமணியர் ஆகிய மூர்த்திகளுக்கு ஐம்பொன் கலந்த உருவங்கள் அமைத்துப்பிரதிஷ்டைசெய்து மகிழ்ந்தனர். இவ்வரிய பணிகளை செய்தும் திருப்தி கொள்ளாமல் மகாஉற்சவகாலத்தில் மாற்றத்தினை ஏற்படுத்தி வழமையில் பத்துத்தினங்கள் நிகழும் உற்சவங்களை பதினைந்து தினங்களாக மகாமாரியின் அருளுடன் மாற்றினர்.

இத்தனை சிறப்புகள் பல பெற்ற அன்னை மகாமாரிக்கு இவ்வாண்டு உற்சவம் இன்று சனிக்கிழமை தொடங்குகிறது. மண்ணுலகில் வளமான வாழ்வையும் வானவர் வாழ விண்ணுலக வாழ்வையும் பெறுதற்கரிய பேரின்பமாகிய அழியா முத்தியையும் அருள்பவளாகிய மகாமாரித்தாய் வருகிற எதிர்வரும் 23ம் திகதி ரதபவனி வருகிறாள். அதற்கு மறுதினம் தீர்த்தக் கிணற்றில் திருமுழுக்காடி திருவருள் பாலிக்க உள்ளாள். அன்னையை வழிபட்டு அவளருள் பெறுவோம்.

## "கூட்டுறவு இயக்கம் தெற்கைவிட வடக்கே நன்கு வளர்ந்திருக்கிறது"

(நீர்வேலி)

"இலங்கையில்கூட்டுறவியக்கம் தென்பகுதியிலும் பார்க்க வடபகுதியிலேயே அபிவிருத்தியடைந்துள்ளது ஊக்கமுள்ள சிறந்த கூட்டுறவாளர்களும் ஆர்வமுள்ள கண்ணியமான பணியாளர்களும் உற்சாகத்துடன் தொழிற்படுவதால்வட பகுதியில் சிறந்த கூட்டுறவியக்கங்களைக் காணக்கூடியதாகவிருக்கின்றது" என்றுநீர்வேலி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்துக்கு வருகை தந்த கூட்டுறவு மகளிர் பயிற்சி ஒன்றியத்தின் பணிப்பாளர் செல்வி ஜெயந்தா தென்னகோன் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் "இப்பகுதி மகளிர்களும் பாராட்டப்பட வேண்டியவர்கள். இவர்களும் உற்சாகத்துடன் வளர்ச்சியில் அக்கறை கொண்டுள்ளது பாராட்டத்தக்கது" எனக்குறிப்பிட்டார். இவற்றுக்கெல்லாம் உதாரணமாக அமைந்துள்ளது இச்சங்கமே தான் என்றும் இங்கு முதன் முதலில் கூட்டுறவுபணியாளர் பயிற்சித்திட்டம், மகளிர் பயிற்சித்திட்டம் என்பன ஆரம்பிக்கப்பட்டு நன்கு பலன் அளித்துள்ளது குறிப்பிடத்தக்கதெனவும் கூறினர்.

சங்கத்தலைவர் செ. சபாரத்தினம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், மகளிர் குழு தலைவி திருமதி வேதவல்லி கந்தையாவும் பேசினர்.

## திருமலை...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கிறது. அப்படியிருந்தபோதும் திருகோணமலை மாவட்டத்திலிருந்து இடைக்கிடையாவது இவ்விருதுறைகளுக்கும் குறைந்தளவு பேரையாவது தெரிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன் "

இவ்வாறு திருகோணமலை எம். பி. திரு இரா. சம்பந்தன் நேற்று பாராளுமன்றத்தில் ஒத்திவைப்புப் பிரேரணையின்போது உரையாற்றுகையில் கூறினர்.

இதுதொடர்பாக உயர் கல்வி பிரதியமைச்சர் திரு ஆர். பி. அத்தநாயக்கா பதிலளிக்கையில் இனஅடிப்படையில் பல்கலைக்கழக அனுமதி எதுவும் வழங்கப்படவில்லை என்றார்.

திரு. சம்பந்தன் இதற்குப் பதிலளிக்கையில் மாவட்ட அடிப்படையில் தான் பல்கலைக்கழக அனுமதிபற்றி நான் தெரிவித்தேனே தவிர இனஅடிப்படையில் எதுவும் கேட்கவில்லையென்றும் பிரதியமைச்சர் இதனை தவருக விளங்கியுள்ளதாகவும் கூறினர்.

இதுதொடர்பாகப் பதிலளிப்பதற்கு இரண்டுவார அவகாசம் தாம்படி உயர்கல்வி பிரதியமைச்சர் திரு. அத்தநாயக்கா கேட்டுக்கொண்டார். (ம-வெ)

## பல்கலைக்....

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கவும் மாவட்டஅபிவிருத்தி சபை தீர்மானித்துள்ளது.

இத்திட்டத்தை மன்னார் மாவட்ட அபிவிருத்திசபை மாத்திரமே மேற்கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (மா)

## சேபால...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நிலைமை இவ்வாறிருக்க, சேபால எக்கநாயக்காவின் மனைவி தனது மகனுடன் நேற்றுஇத்தாலிபயணமானார். அதே நேரத்தில் றிமாண்டிலிருக்கும் சேபால சமர்ப்பித்திருந்த மனு மீது அவரை பிணையில் விடுவதா இல்லையா என்பது பற்றி எதிர்வரும் திங்கட்கிழமை கொழும்பு மாஜிஸ்திரேட் நீதவான் அறிவிப்பார்

## புங்குடுதீவு

(1-ம் பக்கத் தொடர்ச்சி]

போதுள்ள சுற்றுலா உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் நிரந்தமாக்கப்படும்". என்ரூர். [ம-வெ[

## மீண்டும் இயங்குகிறது

(புலோலி)

கடந்த 1975-ம் ஆண்டு புத்தூர் கிராமசபைப் பொதுசன நூல் நிலையத்தை அமைப்பதற்காக சுவீகரிக்கப்பட்ட புத்தூர் இராமநாதன் சனசமூக நிலையம் மீண்டும் இயங்கவுள்ளது.

முன்னைநாள் புத்தூர் கிராம சபைத்தலைவர் எம். திருநாவுக்கரசுவினதும் இப்பகுதி இளைஞர்களினதும் நடவடிக்கைகளையடுத்தே இயங்காமலிருந்த இந்த இராமநாதன் சனசமூகநிலையம் இயங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதனைத்தொடர்ந்து புத்தூர் சிவன்கோவில் முன்றலில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பின்வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

போஷகர்கள்– ஐ. ஜெகநாதன், வீ. சிவசுப்பிரமணியம், எஸ். தில்லையம்பலவாணர், தலைவர் மு. திருநாவுக்கரசு (முன்னாள் கிராமசபைத் தலைவர்) உப தலைவர்கள் வ. தியாகராசா, பெ.மகேஸ்வரன் செயலாளர் கா. கனகசிங்கம், உபசெயலாளர் து. தவராஜ், பொருளாளர் வ். கணேசலிங்கம், உபபொருளாளர் மா. உதயகுமார் நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

## எட்வேர்ட் தமிழகத்தில் விசாரணை

சென்னை ஜூலை. 9

இத்தாலிய விமானத்தைக் கடத்துவதற்கு சேபால எக்கநாயக்காவிற்கு உடந்தையாக இருந்ததாக கருதப்படும் இலங்கையைச் சேர்ந்த ஈ. எல். பண்டாரஎட்வேர்ட்டை தமிழ்நாடு குற்றப்புலனாய்வுத் துறை பொலிசாரும், புதுடில்லி விமானப்படை அதிகாரிகளும், விசாரணை செய்துவருகின்றனர். (வெ)

## யாழ். நூலகத்திற்கு முட்டைஓவிய கண்காட்சி மூலம் ரூ. 11,172

[யாழ்ப்பாணம்)

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற முட்டைக்குள் ஓவியக்கண்காட்சி மூலம் வசூலிக்கப்பட்ட நிதி 11 ஆயிரத்து 172 ரூபா யாழ். பொதுசன நூல்நிலைய நிதிக்கு வழங்கப்பட்டுள்ளது.

சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த ஓவியக்கலைஞர் ஆசிரியர் திரு. எம். எம். சிவசண்முகம் முட்டைக்குள்ளும், அரிசியிலும் வர்ண ஓவியங்களை வரைந்து யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் காட்சிக்கு வைத்திருந்தது ஈழநாடு வாசகர்களுக்கு தெரிந்ததே.

திரு. சிவசண்முகம் இக்கண்காட்சிமூலம் வசூலிக்கப்பட்ட நிதியை யாழ். மாநகர முதல்வர் திரு. இராசா விசுவநாதனிடம் கையளித்துள்ளார்.

இக்கண்காட்சி கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரியிலும் சென்ற வாரம் நடைபெற்றது. [மா]

## கைலாச

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இப்பிள்ளை பிரார்த்தனை உரையாற்றுவார்.

'கலைமகள்' ஆசிரியர் திரு. கி. வா. ஜகந்நாதன் பொன்னடை போர்த்திக் கௌரவிப்பார்.

யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன், பேராசிரியர் கா. இந்திரபாலா, திருமதி வசந்தா வைத்தியநாதன், சிவதர்ம வள்ளல் திரு. க. கனகராசா, யாழ். மாநகர சபை உறுப்பினர் திரு. எஸ். தியாகராஜா, பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, திரு. நம. சிவப்பிரகாசம் ஆகியோர் பாராட்டுரை வழங்குவார்கள். திரு. கி. வா. ஜகந்நாதன் சிறப்புரையாற்றுவார். இதனைத் தொடர்ந்து பேராசிரியர் கைலாசநாதக்குருக்கள் பதிலுரை வழங்குவார்.

## ஹேவாஹெட்ட---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டுள்ளார்.

திரு. அநுராடானியல் ஹேவா ஹெட்ட எம். பி. பதவியை ராஜினமாச் செய்ததையடுத்தே இவர் அப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.


பிரபல தொழிற்சாலை ஒன்றிற்கு

**தச்சர் தேவை**

உடனே மனுச்செய்க
விளம்பர இல; 3789
மே/பா 'ஈழநாடு'
யாழ்ப்பாணம்,
3789


## வேலணை வங்களாவடி முருகன் திருவிழா

[வேலணை]

வேலணை வங்களாவடி அருள் மிகு முருகன் ஆலய அலங்காரத் திருவிழா நாளை நாளை ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகின்றது தொடர்ந்து 11 தினங்கள் திருவிழா நடைபெறும். தினமும் இரவு சாயரட்சைப் பூசைமுடிந்து இரவு 8 மணிக்கு அன்புறகடல் வி. வி கே. ஆறுமுகத்தின் "கந்தபுராண" கதாபிரசங்கம் இடம் பெறும். 7ம் திருவிழா வன்று கம்பராமாயணக் காட்சிப்படலம் இடம் பெறும். தொடர்ந்து தினம் விநாயகப்பெருமான் சகிதம் முருகப்பெருமான் வீதி உலா வருவார். [அ]

## அறிவித்தல்

### மின் தடை

இலங்கை மின்சார சபையினரால் சில அத்தியாவசிய திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட இருப்பதால், 11 – 07 – 1982 - ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 8.00 மணியிலிருந்து பிற்பகல் 2.00 மணி வரையும் 1. கனகரெத்தினம் 2. புங்கன்குளம் 3. அரியாலை 4. உப்புக்குளம் 5. நல்லூர் 6. வைமன் 7. தட்டா தெரு 9. கலட்டி ஆகிய உப-நிலையங்களிலிருந்து மின் விநியோகம் பெறும் பாவனையாளர்களுக்கு மின்சாரம் தடைப்படும் என்பது முன்கூட்டியே இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

சீ. வீ.கே. சிவஞானம்
ஆணையாளர்,
யாழ்.மாநகராட்சி மன்றம்,
மாநகராட்சிமன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
09 – 07 – 1982.

8?3

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1982 ஜூலை மீ 10-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.B. 100236/81
Eelanadu—P. O. Box 49, Tleegram: 'Eelanadu' T'phone: 389 and 8126.